உதயன்
24
விலை
ரூபா.20
சுடர்: 30 கதிர்: 2 கார்த்திகை 12, வெள்ளி 28.11.2014 வள்ளுவர் ஆண்டு: 2045

28 NOV 2014



# மாவீரர் நாள் நேற்று எழுச்சி உலகெங்கும்

சமர்க்களமாடி உயிர்நீத்த மாவீரர்களைநினைவுகூரும் நிகழ்வுகள்உலகெங்கும்உள்ள தமிழர்களால் நேற்று உணர் வெழுச்சியுடன் கடைப்பிடிக் கப்பட்டன. கடும் தடைகளைத் தாண்டி தாயக பூமியிலும் உணர்வுபூர்வமாக மக்கள் நினைவேந்தினர்.

தொடர்புடைய செய்திகள்: பக்.4, பக்.16, பக்.17, பக்.21

# வடக்கில் இல்லை சுதந்திரம்

## பொது எதிரணிக்குத் தாவிய ராஜித தெரிவிப்பு

கொழும்பு, நவ.28
வடக்கு மக்களின் நிலை மிக அபாயகரமாக உள்ளது என கடும் கவலை தெரிவித்திருக்கின்றார் முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சரும், அண்மையில் அரசில் இருந்து எதிரணிப் பக்கம் தாவிய வருமான ராஜித சேனாரத்ன.
"தெற்கில் பேசப்படும் அளவுக்கு வடக்கில் சுதந்திரம் இல்லை. எனவே, அவர்களுக்கும், முழு நாட்டு மக்களுக்கும் சம உரிமையைப் பெற்றுக்கொடுத்து, அனை வரும் சமமாக வாழக் கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவோம்" – என்றும் அவர் தெரிவித்தார்.
கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய வைத்தியர்கள் சங்கத்துடனான சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் அமைச்சரவையையும், அமைச்சரவைக்குப் பொறுப்புக் கூறும் பிரதமரையும் உருவாக்குவதுடன், அமைச்சரவையின் பிரதானியாக பிரதமர் செயற்படுவார் என்றும் ராஜித தெரிவித்தார்.
ஜனவரி 8 ஆம் திகதி உருவாக்கப்படும் தேசிய அரசு இரண்டு வருடங்களுக்கு செயற்படும் என்று கூறிய அவர், இந்த தேசிய அரசில் பங்கேற்று நாட்டு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைத்து அரசியல் கட்சிகளும், முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார். (ந–5,சி)

## மைத்திரியின் சின்னம் புறா



எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக களமிறங்கியுள்ள மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதித் தேர்தலில் புறாச் சின்னத்தில் போட்டியிடவுள்ளார்.
இதனை அவர் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.
2006 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய மங்கள சமரவீர, 'அபே ஜாதிக பெரமுன' (எங்கள் தேசிய முன்னணி) என்ற பெயரில் கட்சியைப் பதிவு செய்திருந்தார்.
தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறி வந்துள்ள மைத்திரிபால சிறிசேனவும், அந்தக் கட்சியின் சார்பிலேயே, ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கவுள்ளார்.
இது தொடர்பில் அவர் தனது உத்தியோகபூர்வ ருவீற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (ந–5)

## 90 ஏக்கர் விடுவிப்பு

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் கருப்புத்தோட்டக்காணியில் 90 ஏக்கர் இராணுவத்தின் வசம் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. அவற்றில்நெற்செய்கையைமேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மக்களின் கடும் அழுத்தங்களுக்குப் பின்னர் இராணுவம் வெளியேறியுள்ளது. பக்.19

## மழை பெய்யும்

எதிர்வரும் 24 மணி நேரத்துக்கு கன மழை பெய்யும் என்று வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. மணிக்கு 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வேண்டத்தகாதவனாகவே அரசில் என்னைப் பார்த்தார்கள்; ராஜித

யாழ்ப்பாணம், நவ.28
ஆளுங்கட்சியில் இருந்த சிலர் என்னை வேண்டத்தகாத ஒருவனாகவே பார்த்தனர். எனது அமைச்சுக்குரிய ஆலோசகரைக் கூட நியமிக்க எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கவலையுடன் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"சுகாதார அமைச்சராக சுயாதீனமாக செயற்பட அரச உயர் மட்டம் எனக்கு இடமளிக்கவில்லை. தேவையான ஆலோசகரைக் கூட நியமிக்க முடியவில்லை. ஏன், எதற்கு என்று எத்தனையோ கேள்விகள். எத்தனையோ அழுத்தங்கள். எத்தனையோ அவமானங்கள். வேண்டத் தகாதவனாகப் பார்க்கப்பட்டேன். அவை அனைத்தையும் கூற விரும்பவில்லை" என்று மைத்திரிபால குறிப்பிட்டார்.
அரசில் உள்ள எந்தவொரு அமைச்சரும் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலையே காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.
ஔடதசட்டத்தைக் கொண்டுவர முயற்சித்தேன். அதைக் கொண்டு வரவும் எனக்கு இடமளிக்கவில்லை. இந்தச் சட்டமூல விவகாரம் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட 400 ஔடத நிறுவங்களில், ஒரு நிறுவனத்திடமிருந்து 25 இலட்சம் ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று எனக்குத் தகவல் கிடைத்தது. யாருக்கு பணத்தைக் கொடுத்தனர் என்று நான் கேட்கவில்லை. மிகவும் கவலை அடைந்தேன்.
2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், விவசாய அமைச்சராக இருந்தபோது, மொரகஹாகந்த திட்டத்துக்கு 9 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் மாபெரும் திட்டமான மகாவலித் திட்டத்தை முன்னெடுக்க 7 ஆயிரம் கோடி ரூபா மட்டுமே செலவிடப்பட்டது.
நாட்டு மக்களின் நன்மை கருதி நான் முன்வைத்த திட்டங்கள் அனைத்தும் தடுக்கப்பட்டன. அமைச்சராக இருந்தபோது என்னால் செய்யமுடியாதுபோன 80 சதவீதத்தை ஜனாதிபதியானதும் 90 சதவீதமாக்குவேன் – என்றார். (ந–5)



மன்னாரில் கடந்த இருநாள்களாகப் பெய்த கடும் மழையால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சௌத்பார் நகரில் இருந்து 62 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. அதேவேளை வடபகுதியெங்கும் நேற்று கடும் மழை பெய்தது. அதனால் பல இடங்களில் வெள்ளம் தேங்கி, மக்கள் பெரும் சிரங்களை எதிர்கொண்டனர்.

தொடர்புடைய செய்திகள்: பக். 2, பக்.20



## 100 நாள்கள்கூடத் தேவையில்லை

கொழும்பு, நவ. 28
நடக்க இருக்கும் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பின்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு 100 நாள்கள்கூடத் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. "அதை விடக்குறைந்த நாள்களே போதும்" என்று புதன்கிழமை அவர் தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் மைத்திரிபாலவை வரவேற்றுப் பேசியபோது ரணில் இதனைக் குறிப்பிட்டார். ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு முன்பாக தற்போதைய மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை வீட்டுக்கு அனுப்புவதுதான் முதல் முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார். அதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (உ)

## பயங்கர வெடிமருந்துடன் மூவர் கைது



பயங்கர வெடிபொருள்களோடு யாழ்ப்பாணத்தில் நேற்று மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். புத்தளத்தைச் சேர்ந்த இவர்கள், அரியாலையைச் சேர்ந்த ஒருவரிடம் வெடிபொருள்களை ஒப்படைப் பதற் காக கசசோகு முன் பாகக் காத்திருந்த போதே சிக்கிக் கொண்டுள்ளனர். பக்.02

## யாழ். தளபதியாக அல்விஸ் பதவியேற்பு

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அந்தப் பதவியில் இருந்த மேஜர் ஜெனரல் உதயபெரேரா திடீரென கொழும்புக்கு இடமாற்றப்பட்டதை அடுத்தே ஜெகத் அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார். பக்.21

செய்திகள்

# வெடிபொருள்களோடு யாழில் மூவர் கைது

## கச்சேரிக்கு முன்பாக ஓட்டோவில்

யாழ்ப்பாணம், நவ.28
அதி உயர் சக்தி வாய்ந்த வெடிமருந்துகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஹான் டயஸ்தலைமையிலான புலனாய்வாளர்கள் குழுவே அவர்களைக் கைது செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
மூவரும் கச்சேரிக்கு முன்பாக வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவித்த பொலிஸார், புத்தளம் பகுதியைச் சேர்ந்த மூன்று பேர், வெடி மருந்துகளை அரியாலையைச் சேர்ந்த ஒருவருக்குக் கொடுப்பதற்காக ஆட்டோவில் காத்திருந்த போதே கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவித்தனர்.
இராணுவப் புலனாய்வாளர்கள் மூலம் கிடைத்த தகவலை அடுத்து, றொஹான் டயஸ் தலைமையிலான குழுவினர் குறித்த ஓட்டோவைச் சோதனைக்கு உட்படுத்தினர் என்றும், அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 130 கிராம் நிறையுடைய 286 வெடிமருந்துக் கம்பிகள், 6 செட் வயர்கள் உள்ளிட்ட பல்வேறு வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன என்று கூறப்படுகின்றது.
கைதுசெய்யப்பட்டுள்ள மூவரும், தற்போது பொலிஸ் தடுப்புக்காவலில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர். (ற-106)


கைப்பற்றப்பட்ட வெடிபொருள்கள்



## யாழ்ப்பாண சாலைக்கு மேலும் 5 புதிய பஸ்கள்

யாழ்ப்பாணம்.நவ.28
இலங்கைப் போக்குவரத்து அமைச்சால் இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண சாலைக்கு மேலும் 5 புதிய பஸ்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் தெரிவித்தார்.
வடமாகணத்தில் பிரதான சாலைகளுக்கு கடந்த மாதம் 70 பஸ்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்டன. அவற்றை விடவும், யாழ். சாலைக்கு மேலதிக 5 பஸ்கள் தேவை என்று கோரிக்கை விடப்பட்டிருந்த நிலையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நேற்று கோண்டாவில் டிப்போவில் 5 பஸ்களைக் கையளித்தார். குறித்த பஸ்கள் அக்கரைப்பற்று, கண்டி, திருகோணமலை, பொத்துவில் பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-14)

## புகையிலைச் செய்கையில் தீவு விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், நவ.28
தீவுப் பகுதியில் விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஈடுபடுவதற்குத் தயாராகிவருகின்றனர்.
வேலணை, ஊர்காவற்றுறை, சரவணை போன்ற பகுதிகளில் வழமையாக விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு வருவது வழக்கம்.
இந்த முறை கால போகத்திலும் விவசாயிகள் இந்தப் பகுதியில் புகையிலைச் செய்கையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். விவசாயிகள் சிலர் தமது விவசாய நிலங்களைச் சீர்படுத்திப் புகையிலை பயிர்களை நாட்டியும் வருகின்றனர்.
இதற்கென விவசாயிகள் வடமராட்சிப் பிரதேசங்களில் இருந்து புகையிலை நாற்றுகளை எடுத்து வருகின்றனர்.
வடமராட்சிப் புகையிலை நாற்றுகளே தீவுப் பகுதி மண் வளத்துக்கு ஏற்ற வகையில் வளர்ந்து பயனைத் தரும் என்றும் புகையிலைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (த-17

### மீனவர் வலையில் சிக்கிய ரி-56

நெல்லியடி, நவ.28
பருத்தித்துறை, சக்கோட்டைக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில், ரி-56 ரக துப்பாக்கி ஒன்று சிக்கியுள்ளது. பருத்தித்துறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் அங்கு சென்று குறித்த துப்பாக்கியை மீட்டுள்ளனர்.
துப்பாக்கி சிக்கியது தொடர்பாகத்தமக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு சென்று அதை மீட்டதாகவும், குறித்த ரி-56 ரகத் துப்பாக்கி பழுதடைந்த நிலையில் காணப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-109)

## அடங்க மறுக்கிறதா இலங்கை? இறுக்குங்கள் பொருளாதாரத்தை

### ஆலோசனை வழங்குகின்றது பிரிட்டன் நாடாளுமன்றம்

யாழ்ப்பாணம், நவ.28
ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை தொடர்ந்தும் ஒத்துழைக்க மறுத்தால், இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும். அது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்திடம் பிரிட்டன் அரசு வலியுறுத்தவேண்டும் – இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.
"ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க இலங்கை அரசு தொடர்ந்து மறுத்தால், இலங்கைக்கான வர்த் தக சலுகைகளை நீக்குவது குறித்து ஏனைய ஐரோப்பிய ஒன்றிய பங்காளிகளுடன், எமது அரசு பேச்சு நடத்த வேண்டும் – என்று பிரிட்டன் நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுவின் தலைவர் றிச்சர்ட் ஒட்டாவே தெரிவித்தார்.
ஐ.நா குழுவை அனுமதிப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தடைகளை விதிப்பது, உட்பட அனைத்து வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிப்பதற்கு பிரிட்டன் அரசு தயாராக இருக்க வேண்டும். விசாரணைக்கு பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு இந்தியாவின் புதிய நிர்வாகத்தின் ஆதரவைப் பெறும் வாய்ப்பையும்பயன்படுத்திக்கொள்ளவேண்டும் – என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியமே இலங்கையின் பிரதான ஏற்றுமதியாளராக இருக்கின்றது. இலங்கைக்கு எதிராக சில தடைகள் ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டுள்ள போதும், ஜி.எஸ்.பி சலுகை இலங்கைக்குத் தொடர்ந்தும் வழங்கப்படுகின்றது. (ற-5)

## பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனம் 10ஆம் திகதி

### ரணில், மைத்திரி கையெழுத்திட்டு வெளியிடுவார்கள்

யாழ்ப்பாணம், நவ.28
பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில், பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கையெழுத்திடவுள்ளனர்.
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல், நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் ஆட்சி முறையை உருவாக்குதல், தேர்தல் முறைகளில் மாற்றம் ஏற்படுத்தல் என்பவற்றுடன், மேலும் பல முக்கிய விடயங்கள் அதில் உள்ளடக்கப்படவுள்ளன.
நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் அமைச்சரவையையும், அமைச்சரவைக்குப் பொறுப்புக்கூறும் பிரதமரையும் உருவாக்குவதுடன், அமைச்சரவையின் பிரதானியாக பிரதமர் செயற்படுவார். இதனூடாக புதிய அரசியல் கலாசாரமொன்று உருவாக்கப்படும் – என்று பொது எதிரணி தெரிவித்துள்ளது. (ற-5)

### ஹுனைஸ் மீது ஒழுக்காற்று – ஹமீட்

கொழும்பு, நவ.28
சமூகத்துக்காகவும், வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தவும் கட்சி மாறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் கூறியிருப்பது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு ஒப்பானதாகும் என்று கூறியுள்ளார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம் வை.எம்.எஸ்.ஹமீட்.
தான்தோன்றித்தனமாக நடந்துவிட்டு காரணங்கள் கூறுவது அவரது சுயநலத்தைக் காட்டுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
கட்சியின் உயர்பீ...த்தைக் கூட்டி ஹுனைஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராயப்படும் என்று தெரிவித்துள்ளார். (ற)

## கடத்தல் மிரட்டல் விடுத்த கடற்படை புலனாய்வாளருக்கு எச்சரிக்கையுடன் மன்னார் நீதிமன்று பிணை அனுமதி

மன்னார், நவ.28
பொது மகன் ஒருவருக்கு தொலைபேசியூடாக கடத்தல் மிரட்டல் விடுத்த கடற்படை புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் மன்னார் நீதிவான் நீதிமன்றால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.
மன்னார், எருக்கலம்பிட்டியில் வசிக்கும் முஸ்லிம் பெண் ஒருவருக்கு கடந்த மே மாதம் 21 ஆம் திகதி வந்த கையடக்கத் தொலைபேசி அழைப்பில், அவரது கணவரைக் கடத்தப் போவதாக மிரட்டல் விடுக்கப்பட்டது. அதுகுறித்து மறுநாள் குறித்த பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.
அது குறித்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார், அந்தத் தொலைபேசி இலக்கம் மன்னார் 'சன்னி விலேஸ்' கடற்படை முகாமில் உள்ள புலனாய்வு உத்தியோகத்தரது என்று கண்டுபிடித்தனர். குறித்த நபரை பொலிஸ் நிலையம் ...ருமாறு தொலைபேசி மூலம் அறிவித்த போது தம்மையும் அவர் அச்சுறுத்தினார் என்று பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
இதுகுறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, குறித்த நபரைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்தது. (ற-103)

# சோதிடம்/ ஜனரஞ்சகம்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: நினைத்ததை நிறைவேற்றிக் கொடுப்பீர்கள். நண்பர்களிடையே இருந்துவந்த பிணக்குகள் நீங்கி நேசத்தோடு வாழ்வீர்கள். தடைப்பட்டுவந்தசுபகாரிய நிகழ்ச்சிகள் இனிதாக நடக்கும்.

**இடபம்**: பெற்றோருக்கான மருத்துவச் செலவுகள் குறையும். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். அரசியல் பிரமுகர்கள் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவார்கள்.

**மிதுனம்**: பொருளாதாரத்தில் தட்டுப்பாடு வராது. பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் நீங்கும். புதிய தொழில் தொடங்குவதற்குப் போட்ட திட்டம் நிறைவேறும். வியாபாரிகள் கொள்முதல் செய்தபொருள்களைநல்ல விலைக்கு விற்பார்கள்.

**கடகம்**: நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். பிரிந்துசென்ற பிள்ளைகள் மீண்டும் வந்து சேர்வார்கள். இளைஞர்கள் தகுதிக்கேற்ப புதிய பதவிகளை அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

**சிங்கம்**: உழைப்பதற்குண்டான வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கும். தனியார் பணியில் இருப்பவர்கள் அதிகமான வேலைப் பளுவைச் சந்திப்பார்கள். புதிதாக தொழில் தொடங்குவதற்குப் போட்ட திட்டம் தள்ளிப்போகும்.

**கன்னி**: வீண் சச்சரவுகள் வர வாய்ப்புண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். பிள்ளைகள் வீட்டின் நிலைமையை அறிந்து நடப்பார்கள்.

**துலாம்**: உங்களுக்கு நன்மைகள் தரும் நாளாக இருக்கும். தொட்ட காரியம் அனைத்திலும் நன்மைகளைப் பெறுவீர்கள். குடும்பத்தினர் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வீட்டில் தடைப்பட்டுவந்த சுபகாரியங்கள் இனிதே நடக்கும்.

**விருச்சிகம்**: பிள்ளைகளுக்கு திருமண வரன்கள் கை கூடி வரும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேர்வார்கள். தொழிலதிபர்கள் தொழிலை விரிவு செய்து, புதிய பங்குதாரர்களையும் பெறுவார்கள். அரசு ஊழியர்களின் வேலைப் பளு குறையும்.

**தனுசு**: ஒருசிலர் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பதவி உயர்வும், விரும்பிய இடத்துக்கு இடமாற்றலும் வந்துசேரும். மாணவர்கள், ஆசிரியர்களால் பாராட்டப்படுவார்கள். அரசியல் பிரமுகர்கள் புதிய பதவிகளை அடைவார்கள்.

**மகரம்**: எதிர்பார்த்தபடி வருமானம் கிடைக்கும். குடும்பத்தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். எதிர்பார்த்த அரசு வேலை வந்துசேரும்.

**கும்பம்**: தொழிலதிபர்கள் தொழிலை அபிவிருத்தி செய்வார்கள். நீண்டகாலமாக இருந்து வந்த சொத்துப் பிரச்சினைகள் நல்ல தீர்வுக்கு வரும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகள் வந்துசேரும்.

**மீனம்**: பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துப் பிரச்சினையில் நல்ல முடிவு வரும். வழக்குகள் சாதகமாகும். வேலைசெய்யும் பிள்ளைகள் குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்வார்கள்.



## என்ன அழகு?

மேற்கு ஆஸ்திரேலியாவின் மிடில் ஐலாண்டில் உள்ள ரோஸ் ஏரி இது. 600 மீற்றர் நீளம்கொண்ட இந்த ஏரி, எப்படி ரோஸ் நிறத்தில் உள்ளது என்று விஞ்ஞானிகள் மண்டையைக் குடைந்து யோசித்தார்கள். அண்மையில்தான் அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்தார்கள். இந்த நீரில் குறைந்த ஊட்டச்சத்து கொண்ட பக்றீரியா உள்ளதாம். அவற்றால்தான் இந்த நிறம். ஏரிக்கு இப்படி ஓர் அழகைத் தந்த பக்றீரியாவுக்கு ஒரு 'ஓ" போடலாமே!

## வியப்பூட்டும் சட்டங்கள்

உலகின் பல்வேறு நாடுகளில் வியப்பூட்டும் பல வித்தியாசமான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. நமது நாட்டில் தான் இருக்கின்ற சட்டங்களே முறைப்படி நடைமுறைப்படுத்தப்படுவதில்லையே. இந்த நிலையில் இவர்களின் விசித்திரமான சட்டங்களை நமது நாட்டில் நடைமுறைப்படுத்தினால் எப்படி இருக்கும் என்பதையும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

அமெரிக்காவின் சான் பிரான்ஸிஸ்கோ மற்றும் இத்தாலியில் புறாக்களுக்கு உணவளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

கனடாவில் 10 டொலருக்கு அதிகமாக பொருள்கள் வாங்கிவிட்டு, சில்லறையாக பணத்தைச் செலுத்துவதற்கு தடையுள்ளது.

ரஷ்யாவின் மொஸ்கோவில், பொதுமக்கள் தங்கள் சொந்த வாகனமான கார் போன்றவற்றை சுத்தமாக வைத்திருக்காதுவிட்டால் பொலிஸாரால் அபராதம் விதிக்கப்படும்.

சிங்கப்பூரில் சுவிங்கம் மெல்லத் தடை உள்ளது. மருத்துவர் பரிந்துரைத்தால் மட்டுமே சுவிங்கம் மெல்ல அனுமதி உள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டனில் நோயை வெளிக்காட்டக் கூடாது. நோயுடன் வெளியே வந்தால் அபராதம் முதல் சிறைத் தண்டனை வரை கிடைக்க வாய்ப்புள்ளது.

டென்மார்க் ஹோட்டல்களில் சாப்பிடும் மக்கள், தங்கள் வயிறு நிறையவில்லை என்று கருதினால் சாப்பாட்டுக்குப் பணம் செலுத்தத் தேவையில்லை.

டென்மார்க்கில் பகலில் சாலையில் சென்றாலும் வாகனத்தின் விளக்குகளை ஒளிரவிட்டுத்தான் செல்லவேண்டும், இல்லையெனில் அபராதம் விதிக்கப்படும்.

ஜேர்மனியின் நகரம் ஒன்றில், வாகனத்தின் எரிபொருள் இடையில் தீர்ந்து வீதியில் வாகனம்நின்றால்அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

சவூதி அரேபியாவில் பெண்கள் வாகனம் செலுத்துவது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவில் வீட்டில் பழுதடைந்த மின்சார பல்பை மாற்றுவதற்குக்கூட சான்று பெற்ற மின் இணைப்பாளர் வரவேண்டும்.

## ரிலாக்ஸா வாசியுங்க...



பிரபலமான திரைப்படங்களின் பிரபலமான வசனங்களுக்கு இப்படி பதில் சொல்லியிருந்தால் எப்படியிருக்கும்.

### சிட்டிசன்:

நீதிமன்றக் காட்சி

**அஜித்:** அத்திப்பட்டினு ஓர் ஊர் இருந்ததே அது தெரியுமா உங்களுக்கு?

**நீதிபதி:** எருமைநாயகம்பட்டினு ஓர் ஊர் இருக்கே அது தெரியுமா உனக்கு???

**அஜித்:** தெரியாதே...

**நீதிபதி:** அப்ப அதுக்கும் இதுக்கும் சரியாப் போச்சு...



### சந்திரமுகி:

**பிரபு:** என்ன கொடுமை சரவணன்...

**ரஜினி:** எது? ஜோதிகாவ உனக்கு ஜோடியாப் போட்டதா?

உதயன்



# புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர் நினைவேந்தல்











யாழ்ப்பாணம், நவ.28

மாவீரர் தினம் மிகப் பெரும் எழுச்சியுடன் நேற்று நினைவு கூரப்பட்டுள்ளது. களமாடி சாவைத் தழுவிய மாவீரர்களுக்கு, விளக் கேற்றி வீரவணக்க அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. புலம் பெயர் தேசம் எங்கும், உணர் வுபூர்வமாக மாவீரர் தினம் நடந்தேறியது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடைப்பிடிக்கப்படும் மாவீ ரர் வாரத்தின் இறுதி நாள் நேற்றாகும். மாவீரர் வாரத்தில் மிக முக்கியமான நாள். மாவீரர் நாளில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால், வித்தான மாவீரர்களுக்காக ஈகச் சுடரேற்றி அஞ்சலி செய்யப்படும். அத்துடன் ஆலய மணிகள் ஒலிக்க விடப்படும். மாவீரர் பாட லான தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே என்ற பாடல் ஒலிக்கவிடப்படும். பிரபாகரனது மாவீரர் தின உரை இடம்பெறும்.

இவையாவற்றையும் உள்வாங் கியதாகப் புலம்பெயர் தேசங்களில் மாவீரர் நாள் நினைவுகள் அனுஷ்டிக்கப்பட்டுள்ளன. மாவீரர் துயிலும் இல்லத்தின் அமைப்பை ஒத்த மேடை அங்கு அமைக்கப்பட்டது. அதில் மாவீரர்கள் துயிலும் நினைவுக் கல்லறைகளும் அமைக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் மாவீரர் தினம் எவ்வாறு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டதோ அதேபோன்று புலம்பெயர் தேசங் களிலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

உருவாக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களின் கல்லறைகளில், மாவீரர்களின் பெற்றோர், உறவினர், நண்பர்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் 33 நாடுகளில் மாவீரர் தினம் நேற்று உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த–5)



# பிரபாவின் பிறந்த நாளில் சதுர்த்தி பூசைக்கும் தடை

தென்மராட்சி, நவ.28

மாதாந்த சதுர்த்திப் பூசை புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினமான நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கியோரால் தடுத்து நிறுத்தப்பட்டது. பூசைக்காகச் செய்யப்பட்ட அன்னதானமும் வேறு இடத்தில் வைத்து பைகளில் போட்டு வழங்கப்பட்டது. சதுர்த்தி விரத காரர்கள் வீடுகளுக்குச் சென்று உணவருந்தினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பளை மாசார் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. ஆலயத்தில் மாதாந்தம் சதுர்த்திப் பூசை அன்னதானத்துடன் இடம்பெறுவது வழமை. அதே போன்று நேற்றும் பூசைக்கான ஏற்பாடுகள் இடம்பெற்ற வேளையில் ஆயுதங்களுடன் வந்த 10 பேர் பிரபாகரனின் பிறந்த நாள் விழா நடத்துகிறீர்களா எனக் கேட்டுப் பூசை நடத்தவிடாமல் தடுத்தனர். பிள்ளையாருக்கு மாதாமாதம் செய்கின்ற பூசை எனக் கூறியபோதிலும் அதை நம்ப மறுத்துப் பூசை செய்ய விடாமல் தடுத்த ஆயுதம் தாங்கியோர் இறுதியில் மணி அடிக்காமல் பூசை செய்யுமாறு கூறினார்.

அவர்களது நேரடிப் பார்வையில் மணி அடிக்காமல் பூசை நடைபெற்றது. பூசை முடிவில் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்தபோது ஆலயத்தில் அன்னதானம்கொடுக்கவேண்டாமெனக் கூறி அன்னதானத்துக்கு சமைத்த அனைத்துப் பாத்திரங்களையும் வெளியேற்றுமாறு அவர்கள் உத்தரவிட்டனர். பாத்திரங்களுடன் அன்னதானத்தைக் கொண்டு சென்ற பூசை உபயகாரர் சற்றுத் தொலைவில் வைத்து பைகளில் போட்டு அங்கு வந்திருந்த 75 இற்கும் மேற்பட்டோருக்கு வழங்கினர். இதனால் ஆலயத்தில் நின்ற விரத காரர்கள் சாப்பாடு கிடைக்காததால் வீடுகளுக்குச் சென்று உணவருந்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலமாக பிள்ளையார் ஆலயத்தில் சதுர்த்தி பூசை இடம்பெற்றுவந்ததாகவும் இம்முறையே இவ்வாறு அடியார்களை மனம் நோகச் செய்த சம்பவம் இடம்பெற்றதாகவும் 75 வயது நிரம்பிய முதியவர் ஒருவர் தெரிவித்தார்.

(த–9)

# உணர்வு சார் போராட்டங்களை யாரும் தோற்கடிக்க முடியாது

## வினோ எம்.பி சூளுரை

மன்னார், நவ. 28

மாவீரர் தினத்தை நினைவு கூருவதில் தமிழ் மக்களை விடப் படைத் தரப்பே மும்முரமாக உள்ளது. எமது உணர்வு சார் போராட்டங்களை யாரும் தோற்கடித்து விடமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங் கம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு – கிழக்கில் நிலை கொண்டுள்ள பாதுகாப்புத் தரப்பினர் இதற்கு வித்திடுகின்றனர். சில வேளைகளில் தமிழ் மக்கள் இவற்றை மறந்து போயிருந்தாலும் உறக்கத்தில் இருந்து தட்டி எழுப்பி மாவீரர்களை நினைவு கொள்ளச் செய்வது பாதுகாப்புப் படையினரே. ஆனால் அவர்கள் பயத்தில் நினைவு கூருகின்றார்கள்.எமது மக்கள் பக்தியில் நினைவு கூருகின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சில பிரதேசங்களில் கடந்த சில நாள்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் வீட்டுக் கதவுகளில் எச்சரிக்கை விடுக்கும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டு வருகின்றன.

இதேபோன்று யாழ். பல்கலைக் கழக மாணவர்களும் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

அச்சுறுத்தல்களினால் அடிபணிய வைக்க முனைந்தால் அவர்களுக்கு நாம் தோல்வியைக் கொடுக்க வேண்டும். தமிழ் தேசியத்துக்காகவும், தமிழ் மக்களின் உரிமைக்காகவும் கடந்த காலங்களில் ஒவ்வொரு தமிழனும் போராடி இருக்கின்றான்.

ஆயுதப்போராட்டம் தோற்றுப் போயிருக்கலாம். அதேபோல் அகிம்சை போராட்டமும் நசுக்கப்படலாம். ஆனால் ஆழ் மனதில் இருந்து ஊற்றெடுக்கும் உணர்வு சார்ந்த போராட்டங்களை எத்தனை படைகள் சூழ்ந்தாலும் தோற்கடிக்க முடியாது – என்றார்.

(த–56)

மேலும் செய்திகள் படங்கள் 16, 17ஆம் பக்கம்



பலத்த இரானுவ ஆக்கிரமிப்புக்கு மத்தியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நேற்று மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று மாலை 6.05 மணிக்குத் தேசத்தின் விடுதலைக்காக தமதுயிரை ஈய்ந்த மாவீரர்களுக்கு யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் ஈகச் சுடரேற்றப்பட்டது. (த–21)

# கரைச்சி பிரதேச செயலகத்தில் மதிப்பளிப்பு நிகழ்வுக்குத் தடை

கிளிநொச்சி, நவ.28

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் இடர் முகாமைத்துவ மதிப்பளிப்பு நிகழ்வை இராணுவப் புலனாய்வாளர்கள் தலையீடு செய்து இடைநிறுத்தியுள்ளனர்.

தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளில் நடைபெற்ற அரச நிகழ்வே நேற்று முன்தினம் இடைநிறுத்தப்பட்டது.

தேசிய இடர் முகாமைத்துவ நாளினை முன்னிட்டு கரைச்சி பிர்தேச செயலகத்தில் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் முற்பகல் 11 மணிக்கு நிகழ்வு தொடங்கியது. 11.45 மணியளவில் பிரதேச செயலகத்துக்கு வருகை தந்த இராணுவப் புலனாய்வாளர்கள் பிரதேச செயலருடன் கதைத்து நிகழ்வை இடைநிறுத்தினர்.

அரச உயர்அதிகாரிகளை மற்றும் இடர் முகாமைத்துவ தொண்டர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு இடைநிறுத்தப்பட்டதுடன் மதிய உணவும் பயத்துடன் பரிமாறப்பட்டது.

தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளில் நிகழ்வு நடத்தப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டது.


(த–18)

## திடீர் வெடியால் பரபரப்பு

யாழ்.நகரப் பகுதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் வெடிக்கப்பட்ட பட்டாசுகளால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்.கஸ்தூரியார் வீதியும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியும் சந்திக்கும்இடத்தில்நேற்றுமாலை 6.30 மணியளவில் இனந் தெரியாத சிலர் பட்டாசுகளை கொழுத்தி எறிந்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். அவை சில செக்கன்கள் படபட வென வெடித்தன.

இதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்து வந்தனர் இராணுவத்தினர். இதனால் அப் பகுதியில் பரபரப்பான நிலை ஏற்பட்டது. (த–17)



நாட்டு மக்கள் அனைவரையும்

சமமாக பேணும் அதிமேதகு ஜனாதிபதி

**மகிந்த ராஜபக்ஷ** அவர்களது

மகிந்த சிந்தனையின்

எதிர்கால நோக்கிற்கு ஏற்ற

ஒரு சிறந்த திட்டம்



கௌரவ அமைச்சர்
குமார வெல்கம
போக்குவரத்து அமைச்சர்



கௌரவ பிரதி அமைச்சர்
ரோகன திஸாநாயக
போக்குவரத்து

வடபகுதி மக்களுக்கு தேவையான சாரதி அனுமதி பத்திரத்தை கொழும்புக்கு செல்லும் சிரமமின்றி, யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்திலேயே ஆன்லைன் (online) மூலம் பெற்றுக்கொள்ளும் வசதி இன்று முதல் உங்களுக்கு கிடைக்கிறது.

DMT

**Department of Motor Traffic**




மோட்டார் போக்குவரத்து திணைக்களம் , மாவட்ட காரியாலயம், கச்சேரி, யாழ்ப்பாணம்

# செய்திகள்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அடிப்படைவாதக் கட்சிகளின் தயவை உதறுங்கள் மைத்திரி

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராகப் போட்டியிடப்போவ தாக மைத்திரிபால சிறிசேன அறிவித்ததைத் தொடர்ந்து அவருக்கான ஆதரவு பெருகி வருகின்றது. மஹிந்த ராஜபக்ஷ முதன் முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்தபோது இருந்ததைப் போலவே மைத்திரிபாலவுக்கும் இப்போது ஆதரவு பெருகி வருகிறது.

நேற்றுமுன்தினம்கூட, கூட்டுச்சேர்ந்த சட்டத்தரணிகள் (லோயேர்ஸ் கெலக்டிவ்) என்ற அமைப்பு மைத்திரிபாலவுக்கான தனது ஆதரவைப் பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. வேறு பல அமைப்புகளும் தெற்கில் மைத்திரிபாலவுக்கு தமது ஆதரவை அறிவித்து வருகின்றன. இது மைத்திரிபாலவின் வெற்றிக்கு உரமூட்டக்கூடியது என்றபோதும் கவனிக்கத்தக்க முக்கிய அம்சமும் ஒன்றுண்டு.

ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளும் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. இது போன்ற சிங்களப் பேரினவாத அடிப்படைவாத சக்திகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் எந்த வேட்பாளரும், தமிழர்களின் பிரச்சினையை வாக்கு அரசியலுக்கு அப்பால் - நேர்மையாக, உண்மையாகக் கையாள்வதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவே.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவதற்கு ஹெல உறுமய அவருக்கு முழு ஆதரவை வழங்கியது என்பதும் அந்தக் கட்சியுடன் மஹிந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக்கூடச் செய்துகொண்டார் என்பதும் ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதை பின்நோக்கித் தள்ளுவதற்கு - காலங்கடத்துவதற்கு - இத்தகைய கடும்போக்கு இனவாதக் கட்சிகளை நன்கு பயன்படுத்திக்கொண்டார் என்பதே வரலாறு.

இப்போது அதே கட்சி மைத்திரிபால ஆட்சியில் அமர்வதற்கு உதவுமேயானால், அதுவும் புத்த பிக்குகளைக்கொண்ட ஒரு கட்சி மைத்திரிபால ஆட்சியில் அமர உதவுமேயானால், அதனது அழுங்குப் பிடியிலிருந்து மைத்திரியால் ஒருபோதும் வெளியே வரமுடியப்போவதில்லை.

புத்த பிக்குகள் சிங்கள மக்களிடம் அதிகம் செல்வாக்குள்ளவர்கள் என்ற அடிப்படையில் அவர்களைப் பகைத்துக்கொண்ட எந்த ஆட்சியாளரும் இலங்கை நாட்டில் வெற்றிகரமாக ஆட்சி நடத்தியதாக வரலாறில்லை. அது எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க முதல் இன்றைய மஹிந்த ராஜபக்ஷ வரையில் கண்டறியப்பட்ட உண்மை. அப்படி இருக்கும்போது தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காக வைத்து அடிப்படைச் சிங்களவாதக் கட்சிகளின் ஆதரவை மைத்திரிபால பெறுவது குறித்து அவர் நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

அத்தகைய அடிப்படைவாத சிங்களக் கட்சிகளுடன் கூட்டுச் சேரும் ஒருவரை ஆதரிக்க முடியுமா என்பதையும் அப்படிப்பட்ட ஒருவர் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பது சாத்தியமானதா என்பதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் சிந்திக்க வேண்டியது.

# ஆண்டுகள் பல கடந்தும் ஆறாத அந்தக் கணங்கள்

ராஜ்

*“மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை*
*முடிசூடும் தமிழ்மீது உறுதி.*
*வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்*
*வரலாறு மீதிலும் உறுதி”*

இந்தப் பாடல் வரிகளில் புதைந்திருக்கும் சோகத்தையும் வேதனையையும் உணர்ந்த அந்தக் கணங்கள் இன்றுபோல் இருக்கிறது.

10 வருடங்களுக்கு முன்னர், நவம்பர் 27ஆம் திகதி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் அன்றைய நிகழ்வின் செய்திச் சேகரிப்புப் பணிக்காக ச்க ஊடகவியலாளர்களுடன் அங்கு நின்றிருந்த கணங்களை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். புலிகளின் மாவீரர் நாள் நேற்று தமிழர் தாயகப் பகுதிகளில் மக்களின் குரல்கள் மௌனிக்கப்பட்டவாறு, மிக அமைதியாகவும் அடக்கமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களை ஈய்ந்து தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக, உழைத்த அந்த வீர மறவர்களின் தியாகங்களை நினைவுகூரும் நன்நாள் இது.

2009ஆம் ஆண்டு புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அந்த மாவீரர் நாள் நிகழ்வுகளை வெளிப்படையாக அனுஷ்டிக்க முடியாத நிலைமை தமிழர் தாயகப் பகுதியெங்கும் இருந்து வருகிறது. இராணுவ அடக்குமுறைகளாலும் அச்சுறுத்தல்களாலும் அதனை நினைவுகூர முடியாத இக்கட்டு நிலையில் தமிழர்கள் உள்ளார்கள்.

மாவீரர் நினைவு நாளை அனுஷ்டிக்க முடியாது போனாலும் அந்த வீர மறவர்கள் பற்றிய நினைவுகளை மக்கள் மனங்களில் இருந்து என்றுமே அழித்துவிடமுடியாது.

தாயகக் கனவுடன், சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளின் தியாகம் என்றுமே எம் மனங்களில் இருந்து விலகி விடாது என்பது நிச்சயம்.

நேற்று அனுஷ்டிக்கப்பட்ட அந்த மாவீரர் தினம் என்னை 10 ஆண்டுகளுக்கு முன்னே நடந்த மாவீரர் நாளொன்றின் நினைவுகளுக்கு இட்டுச் சென்றது. அந்த நினைவினால், நேற்றைய எனது அலுவலகக் கடமையைக்கூட திருப்திகரமாக செய்து முடிக்க இயலாத அளவுக்கு மனம் பாரம் அடைந்தது. அந்த நினைவுகளால் அடிக்கடி கண்கள் குளமாக, மனம் கனக்க நேற்றைய நாளின் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.

2004ஆம் ஆண்டு மாவீரர் நாள் நிகழ்வுகளின் செய்தி சேகரிப்புக்காக சக ஊடகவியலாளர்களுடன் முதல் முறையாக நான் மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் நுழைந்த அந்தக் கணங்களை எண்ணும் வேளையில், இப்போதும் மயிர்கூச் செறிகிறது. மாலை 5.30 மணி இருக்கும், நாம் அங்கே நுழைந்த வேளை, துயிலும் இல்லத்தில் கல்லறைகள் அனைத்தும் பூக்களால் நிரம்பி இருந்தன. ஒவ்வொரு கல்லறைக்கு முன்பாகவும் ஒவ்வொரு தீப்பந்தம் நாட்டப்பட்டிருந்தது. இந்த மாவீரர் நாள் அனுபவம் எனக்கு புதியதாக இருந் தாலும், அங்கே நடந்த–பார்த்த–அனுபவித்த நிகழ்வுகள் இன்றும் நிழலாய் என் மனதில் நிரந்தர இடம்பிடித்துள்ளன.

கல்லறைகளுக்கு முன்னால் தமது உறவுகளை போராட்டத்துக்கு அர்ப்பணித்த, பெற்றோர்கள், மனைவிமார், கணவர்மார், பிள்ளைகள், உறவுகள் என அனைவரும் கைகளில் பூமாலைகளையும் ஊதுபத்திகளையும் ஏந்தியவாறு, நின்றுகொண்டிருக்கிறார்கள். சில கல்லறைகளுக்கு மேல் அழுது புரண்டு சோக மிகுதியால், களைத்துப் போயிருக்கிறார்கள். அலை அலையாக போராளிகளும் அங்கே கூடியிருக்கிறார்கள்.

அந்தக் கணங்களுக்கான காத்திருப்பு அங்கு எல்லோர் மனங்களிலும் தெளிவாகத் தெரிகிறது. துயிலும் இல்லத்தின் நடுவே அமைக்கப்பட்டிருக்கும் பெரிய மேடையில், பிரதான ஈகச்சுடர் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் முன்னால் தளபதிகள் சிலர், நட்ட சிலைகளாக, நின்றுகொண்டிருக்கிறார்கள். மாவீரர்களின் கல்லறைக்கு முன்னால் பெற்றோரும் உறவுகளும் எழுந்து நிற்கிறார்கள். இன்னும் சில விநாடிகளில் அந்த நேரம் வரப்போகின்றது. அன்றைய தினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மிகப் பிரமாண்டமான திரை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தத் திரையில் என்ன காண்பிக்கப் போகின்றார்கள் என்ற எதிர்பார்ப்பு எல்லோர் மனங்களிலும் குடிகொண்டிருந்தது. இந்த நேரத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை ஒருங்கிணைத்துக்கொண்டிருந்த புலிகளின் குரல் வானொலியில் அந்த அறிவிப்பு வெளியாகியது. “சரியாக நேரம் மாலை 6 மணி 5 நிமிடம். ஆலயங்களில் மணிகள் ஓங்கி ஒலிக்கப்படுகின்றன. பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடமொன்றில் பிரதான ஈகச்சுடரை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஏற்றி வைக்கிறார். அதே நேரத்தில் தமிழர் தாயகப் பகுதியெங்கும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் தளபதிகள் பிரதான சுடர்களை ஏற்றுகிறார்கள். மாவீரர் கல்லறைகளுக்குமுன்னால் உள்ள சுடர்களை அவர்களின் பெற்றோரும் உறவுகளும் ஏற்றுகிறார்கள்” என்று அந்த அறிவிப்பு முடிவடைகிறது. அந்தக் கணமே, சுடர்கள் அனைத்தும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்குகின்றன. அந்தச் சுடர்களின் ஒளியில், அங்கு திரண்டிருந்தவர்களின் முகங்களில் குடிகொண்டிருந்த சோகமும், அழுகையும், ஓலங்களும் தெளிவாகத் தெரிகின்றன. இந்த வேதனை மிகுந்த நிகழ்வுகளைப் பார்த்து, என் இதயமும் கனத்து இடிந்துபோனது. இப்போது, ஊடகவியலாளர் என்ற நிலையையும்தாண்டி நான், அங்கு நிற்பவர்களில் ஒருவனானேன். அந்தச் சுடர்களின் வெளிச்சம், துயிலும் இல்லத்தை ஒளியூட்ட பாடல் ஆரம்பமாகின்றது.

*“மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை*
*முடிசூடும் தமிழ்மீது உறுதி.*
*வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்*
*வரலாறு மீதிலும் உறுதி”*

என்ற அந்த வரிகளுடன் வரும் இசை துயிலும் இல்லத்தில் இருப்பவர்களின் அழுகையையும் விம்மல்களையும் மேலும் அதிகரிக்கவைத்து கண்களைக் குளமாக்குகின்றது. எங்கும் அழுகை. போராளிகள் உட்பட எவரும் அதற்கு விதிவிலக்கில்லை. அந்தப் பாடல் முடிவடையும் வரை மயான அமைதி. அழுகைக் குரல்கள் மட்டுமே கேட்கின்றன. பலர் கல்லறைகளின் மீது விழுந்து தமது சோகத்தின் மிகுதியால் விம்மிக்கொண்டிருக்கிறார்கள்.

எதையுமே கண்களால் பார்ப்பதற்கு திராணியற்றவனாக காதுகளால் கேட்க இயலாதவனாக, ஆகிவிட்டேன் நான். நின்றுகொண்டிருந்த எனது கால்கள் சோர்வடைந்து, கீழே விழுந்து விடுவேனோ என்ற ஒரு நிலையை என்னில் உணர்கிறேன். கையில் கமராவை வைத்திருந்தபோதும், அதனைப் பிடித்து படங்களை எடுக்க இயலாதவாறு கைகளும் சோர்த்துவிட்டன. துக்கமிகுதியால் என் கண்களில் இருந்தும் கண்ணீர் பெருக்கெடுத்தது. அதனை அடக்க நினைத்தும் தோற்றுப் போய், இயலாதமையை உணர்ந்தவனாக அந்த வீர மறவர்களுக்காக கண்ணீர் விடுகின்றேன். இப்போது என் சக ஊடகவியலாளர்களைநோக்குகிறேன். அவர்களது நிலையும் அதே தான். பாடல் முடிவடைந்ததும், புலிகளின் குரல் வானொலியில் இருந்து அடுத்த அறிவிப்பு வருகிறது.

“தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தனது மாவீரர் தின உரையை ஆற்றுகிறார்” என்று அறிவிப்பு முடிந்ததும் அங்கு பொருத்தப்பட்டிருந்த அகலத் திரையில் தனக்கே உரித்தான அந்தக் கம்பீரத்துடன் தோன்றினார் தலைவர். உலகமே மிக உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கும்,கேட்டுக் கொண்டிருக்கும் கணங்கள் அவை. வருடத்தில் ஒரு முறை மட்டும், அவர் ஆற்றும் அந்த உரையைக் கேட்பதற்காக தவம் கிடப்பார்கள் தென் னிலங்கை ஆட்சியாளர்களும் உலக அரசியல் தலைவர்களும்.

என் பாசத்துக்குரிய தமிழீழ மக்களே! என்று தொடங்கும் அந்த உரையில், அவர் என்னத்தைச் சொல்லப்போகிறார்?, எதைக் கோடி காட்டப் போகிறார்?, போரா, சமாதானமா? என்பதை அறிந்துகொள்ள பலர் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் அந்த உரையும் உள்ளர்த்தங்கள் பல பொதிந்ததுதான். இவையெல்லாம் நடந்து இன்று 10 ஆண்டுகள் கடந்தபோதும், நேற்று அந்த நினைவுகள் என் மனதில் வந்து பெரும் சோகத்தையும் வேதனையையும் தந்துசென்றிருக்கின்றன.

து.துசியந்தன்

# சித்திர பாடத் திட்டத்தில் நம்மவர் அடையாளங்கள்

கலையாக்கம் என்பது சமூகத்திலிருந்து விடுபட்ட (Isolated) செயல்முறையன்று. கலையாக்கங்கள் அதனை உருவாக்கிய சமூகத்தின் குறியீடுகளாகவே கொள்ளப்படும். சமூகத்தின் பண்பாட்டு மட்டமும், பண்பாட்டு அசைவியக்கமும் கலைகளால் வெளிப்படுத்தப்படும்.

ஒவ்வொரு சமுதாயமும் தமக்கென ஒரு பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டிருக்கிறது. இதுவே அந்தச் சமுதாயத்தின் அடையாள மாகும். இந்த அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டும் கருவி களாக கலைகள் அமைகின்றன.

அந்த வகையில், ஒரு சமுதாயத்தின் இருப்பு கலைகளின் உயிர்ப்போடு பின்னிப்பிணைந்துள்ளது. இந்த அடிப்படையில் ஈழத் தமிழர்களின் பண்பாட்டின் அடையாளத்தை வெளிப்படுத்தும் கலைகளைக் கண்டறியும் தேடல் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்ப்பாண ஓவிய மரபுக்கு நீண்டதொரு வரலாறு உண்டு. இதன் ஒரு பகுதியை கலாகேசரி தம்பித்துரையின் பிற்கால யாழ்ப்பாணத்துச் சுவரோவியங்கள் என்ற நூல்மூலம் அறிந்து கொள்ளலாம். ஆனாலும் இந்தச் சுவரோவியங்கலைப் பார்த்து அனுபவிக்கக்கூடிய நிலை இல்லை. முற்கால ஓவியங்கள் வெளிநாட்டவர் படையெடுப்புக்களாலும், பிற்கால ஓவியங்கள் கலைப் பொருள்களைப் பாதுகாக்கும் உணர்வு இன்மையாலும் அழிந்து போயின. யாழ்ப்பாணத்து ஓவியக்கலை ஆலயங்களுடன் இணைந்தே வளர்ச்சி பெற்றது.

ஆலய நிர்வாகிகள் கலையைப் பேணும் உணர்வற்றவர்களாகக் காணப்பட்டமையினால் சுவரோவியங்கலைப் பேணும் நினைப்பில்லாதவர்களாக அவற்றை அழிய விட்டுவிட்டனர். இத்தகைய நிலைமையிலிருந்து எமது கலை மூலங்களை தேடும் ஓர் அத்தியாயமாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் அழகியல் பாடங்களில் நம்மவர் அடையாளங்கள் என்ற கருத்தாடல் அரங்கு அமைகின்றது.

இதேவேளை– அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வரும் சித்திர பாடபுதிய கலைத்திட்டத்தில் நம்மவர்களின் அடையாளங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டமை மிக முக்கிய மைல்கல்லாக அமைகின்றது.

சித்திரபாடத்தைப் பொறுத்தவரை இதுவரை காலமும் இருந்து வந்த கலைத்திட்டத்தில் சிங்கள, பௌத்த கலைகளே முக்கிய இடத்தைப் பெற்றுவந்துள்ளன. இதனால் நமது கலையாக்கங்களை அறியவும், பேணவும், நயக்கவும் சந்தர்ப்பம் இல்லாத நிலைமை காணப்பட்டது.

தரம் 6 தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரையிலான சித்திர பாட கலைத்திட்டத்தில் தமிழர் கலைவடிவங்கள் சேர்த்துக்' கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த ஓவியங்கள், ஆலய சுவரோவியங்கள், சடங்குகளில் காணப்படும் கலையம்சங்கள், ஆலய சிற்பங்கள், கைப்பணி வேலைகள் போன்ற பல அம்சங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் சுவரோவியங்கள் கவனிப்பாரற்ற நிலையில் அநாதைகளாக காட்சி தருகின்றன. இந்த ஓவியங்கள் சுவர் ஓவிய மரபிலோ அல்லது தரமான ஒட்டு வர்ண முறையிலோ தீட்டப்பட்டிருக்கவில்லை. வெண்சாத்து பூசிய சுவரிலே ஒட்டு வர்ணங்களை, வச்சிரம் போன்ற ஒரு வகைப் பசையுடன் சேர்த்து தீட்டியிருக்கிறார்கள். எனவே இவை வெப்ப, தட்ப நிலைகளின் தாக்கங்களினால் ஒளி மங்கி, நிறங்குன்றி, சிதைந்து போகும் நிலையில் இன்று இருக்கின்றன.

ஆகவே இவற்றின் கலைச் சிறப்புக்களை ஆராய்ந்து வரலாற்றில் இத்தகைய சுவரோவியங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தன என்பதை நமது வருங்கால மக்களுக்கும், ஏனையோருக்கும் அறியத் தரவேண்டியது நமது பணியாகும் என கலாகேசரி தம்பித்துரை அவர்கள் யாழ்ப்பாண்த்துப் பிற்கால சுவரோவியங்கள் எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

இந்த நூலில் குறிப்பிடப்படும் பல கோயில் சுவரோவியங்கள் இன்று முற்றாக மறைந்துவிட்டன. இருப்பினும் எங்கெல்லாம் நம்மவர்களில் சுவரோவியங்கள் இருந்தன என்பதற்கு ஆதாரங்களைத் தருகிறது. அந்த ஆதாரங்களின் அடிப்படையில் நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலில் காணப்பட்ட சுவரோவியங்கள் சித்திரபாட கலைத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

அழிந்துபோன சட்டநாதர் சிவன் கோயில் ஓவியங்கள் தாவடியைச் சேர்ந்த எம்.துரைசாமி என்பவரால் வரையப்பட்டதாகும். இங்கு காணப்பட்ட ஓவியங்களில் கூவும் சேவல், வெள்ளைக்கை ஐயரும் விநாயகரும் என்ற ஓவியங்கள் சிறப்பு வாய்ந்தவை. இந்த ஓவியங்கள் கபில நிறச் சாயலில் இந்திய தஞ்சாவூர் ஓவியப் பாணியில் வரையப்பட்டவை.

நம்மவர்களின் பழைய சுவரோவியங்கள் எல்லாம் இன்று மறைந்துபோக அண்மைக் காலங்களில் வரையப்பட்ட ஓவியங்களையாவது பாதுகாப்பது எமது இனத்துக்குச் செய்யும் மிக முக்கிய கடமையாகும்.

அண்மைக் காலத்தில் கோயில்களில் சுவரோவியங்களையும், திரைச் சீலைகளிலும் ஓவியங்களைப் படைத்து, யாழ்ப்பாணத்த வர்களது சுவரோவியக் கலைக்கு புத்துயிர்ப்பு வழங்கிய கலைஞராக அமரர் பெ.சுப்பிரமணியம் (ஆர்டிஸ் மணியம்) கருதப்படுகின்றார். இவரது சிறந்த படைப்புக்கள் பின்வரும் ஆலயங்களில் காணப்படுகின்றன. இந்தப் படைப்புக்கள் சித்திரபாட கலைத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

*இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில்*
*வல்வெட்டித்துறை சிவன், அம்மன் கோயில்*
*நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில்*
*நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில்*
*சுதுமலை அம்மன் கோயில்*

இங்கு காணப்படும் ஓவியங்கள் புராணக் கதைகளை சித்திரிப்பதோடு, இந்திய ஓவியரான இரவிவர்மாவின் ஓவியங்களையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

தென்னிலங்கை பௌத்த ஓவியங்களால் வரையப்பட்ட விகாரைச் சுவரோவியங்கள் மிகச் சிறப்பாக பாதுகாக்கப்படுவதோடு, அந்தச் சுவரோவியங்களினால் அந்த விகாரை பிரபல்யம் பெற்று சுற்றுலாத் தலமாக மாறியுள்ளதை அவதானிக்கலாம்.

அந்த வகையில் சித்திரபாட கலைத்திட்டத்தில் நம்மவர் கலைப்படைப்புக்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டமையினால் எல்லா மொழிமூல மாணவர்களும் அவற்றை அறியும் சந்தர்ப்பமும் கிடைத்துள்ளது.

இந்த அடிப்படையில் நம்மவர் படைப்புக்களை காரண இலங்கையில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள், ஆர்வலர்கள் வரும் சந்தர்ப்பம் உள்ளதால் எஞ்சியிருக்கும் இந்த நம்மவர் படைப்புகளையாவது பாதுகாக்கவேண்டியது மிக அவசியமாகிறது.

ஆகவே பாடத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்தக் கோயில் ஓவியங்களை, அந்தந்த ஆலய நிர்வாக சபையும், சமூகத்தினரும் அழியாது, அழிக்காது பாதுகாக்க முன்வர வேண்டியது காலத்தின் தேவையாகும்.



## இது மரநடுகை மாதம்

# சிந்திப்போம் செயற்படுவோம் மரம் நடுகை மாதத்தில்

சி.நற்குணலிங்கம்,
நெல்லியடி.

சூழலுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடைத்தாக்கம் செய்து கொண்டு வாழ்ந்துவரும் மனிதன், சிந்தனையற்ற முறையில் பசுமையான காடுகளை அழித்து வருகின்றான். வட மாகாணத்தில் துணுக்காய், ஜெயபுரம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளின் பெரும்பாலான காடுகள் அழிக்கப்பட்டு, அந்தப் பகுதிகள் பாலைவனம் போல் காட்சியளிக்கின்றன. –இவ்வாறு ஏனைய இடங்களில் உள்ள காடுகளும் அழிக்கப்பட்டு வருகின்றன.

காடுகள் அழிக்கப்படுவதால் மழைவீழ்ச்சி குறைவடைவதுடன் பருவம் தப்பிய மழையையும் மக்கள் எதிர்கொள்ள வேண்டிவரும். கடந்த வருடம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் பருவம் தப்பிய மழை காரணமாக கூடுதலான அழிவுகளை எதிர்கொண்டன. இவை எமக்கொரு பாடமாக அமைய வேண்டும்.

காடழிப்பினால் காட்டு மரங்களிலிருந்து வெளியேறும் ஒட்சிசன் வாயு குறைவடைந்து செல்கின்றது. மனிதன் சீவிக்க வேண்டுமெனில் ஒரு நாளைக்கு மூன்று சிலிண்டர் அளவான ஒட்சிசன் வாயுவைச் சுவாசிக்க வேண்டும். எனவே நாம் வாழும் காலம் சுருங்குகின்றது என்பதனை மனதில் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

பெரும்பாலான பகுதிகளில் காடுகளை அழிப்பதுடன் நிற்காது அதற்கு நெருப்பும் வைக்கிறார்கள். இதனால் ஏற்படும் தீச்சுவாலையால் ஏற்கனவே பாதிப்படைந்துள்ள ஓசோன் படலம் மேலும் அழிவுக்கு உட்படுகின்றது.

சுற்றுச் சூழலியல் என்ற கோட்பாட்டை ஒழுங்காகப் பின்பற்றாது போனமை அதன் குறிக்கோள்களின் உண்மையான நோக்கங்களிலிருந்து விலகிச் செல்லக் காரணமாகிறது. அத்துடன் மனிதன் சுற்றுச் சூழலின் இயற்கைச் சமநிலையைப் பற்றி பூரணமாக அறியாமல் இருப்பதும் இந்த அழிவுக்கு காரண மாகும்.

சுற்றாடலில் அக்கறை கொண்டவர்கள் , சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் உரத்துக் குரல் கொடுக்க வேண்டிய கடமைப்பாட்டுக்கு உட்பட்டுள்ளனர். சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, சூழல் பாதுகாப்புக்கான அமைச்சு, சூழல் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் இவையாவும் இருக்கின்றபோதும் காடழிப்பு நடந்து கொண்டு தான் இருக்கின்றது.

மனம் போன போக்கில் செயற்பட்டுக் கொண்டிருந்தால் அழிவு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும். சூழலைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அந்தப் பகுதி வாழ் மக்களே ஏற்க வேண்டும் என்பதே யதார்த்தமான உண்மையாகும். எனவே நாட்டிய மரங்கள் அழிக்கப்பட்டாலும் மீண்டும் நடுவோம் மரங்களை.




# கட்டுரை

# போய் வா அப்பா!

## – எஸ்.பொ. நினைவுக் குறிப்பு

ஜெயந்தன் ஜேசுதாஸ்



ஈழ இலக்கியத்தின் மையங்களில் ஒருவராக இயங்கி,படைப்பூக்கம்மிகுந்தபலகலைப்புனைவுகளைத் தந்து, நவீனத் தமிழ் இலக்கியத்தை செழுமைப் படுத்திய 'அப்பா எஸ்.பொ. என்று எங்களால் வாஞ்சையுடன் அழைக்கப்பட்டஎஸ்.பொன்னுத்துரை நேற்று ஆஸ்திரேலியாவில் மறைந்தார் என்ற செய்தி தமிழ் இலக்கிய உலகத்தை இடியாகத் தாக்கியது.

அது 2003 ஆம் ஆண்டு. கல்கியில் செய்தியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். கவிஞர் யுகபாரதியிடமிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு. "அண்ணா இன்னும் கொஞ்ச நேரத்தில் எஸ்.பொ. என்றொருவர் பேசுவார். கோடம்பாக்கம் காவல் நிலையத்தில் அவரை அழைத்திருக்கிறார்கள். அவரது ஆஸ்திரேலிய கடவுச் சீட்டு முடிந்துவிட்டது. கொஞ்சம் உதவமுடியுமா?", என்றார். எனக்கோ சிரிப்புத்தான் வந்தது.நான்செல்வாக்குடன்திகழ,நாளோர்அரசியல்பீட செய்தியாளன் அல்ல. என்றாலும் எனக்குக் கல்கியில் வேலை வாங்கிக் கொடுத்த யுகபாரதியின் பேச்சை எப்படித் தட்டு வது? சரி என்று சொல்லிவிட்டு யார் இந்த எஸ்.பொ? என்று கேட்டுவிட்டேன். நல்லவேளை இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டீர்கள். தாத்தாவிடம் கேட்டுவிடாதீர்கள். அவரது 'மித்ர' பதிப்பகத்துக்கு அழைத்துப்போகிறேன். அப்போது உங்களுக்கே விளங்கும் என்றார்.

கொஞ்ச நேரத்தில் "ஜெயந்தன் இருக்காரா? நான் எஸ்.பொ கதைக்கிறேன், என்று ஈழத்தமிழில் பேசிய குரல் கரகரப்பாக பிசிறு தட்டினாலும் கம்பீரமாக இருந்தது. அந்தக் குரலில் என் அப்பாவின் சாயலும் கலந்திருந்தது. எனக்காக எனது பதிப்பகத்துக்கு வரமுடியுமா?", என்றார். கோடம்பாக்கம் மேம்பாலத்தின் கீழ் இருக்கும் மசூதிக்குச் சொந்தமான வணிக வளாகத்தில்தான் எஸ்.பொவின் 'மித்ர' பதிப்பகத்தின் அலுவலகம் இயங்கி வந்தது.

> காய்ந்த புற்களை மேய்வதைப்போல் புகைந்துகொண்டிருந்த எனது நவீன வாசிப்புக்கு உண்மையாகவே தீ மூட்டியது எஸ்.பொவின் 'தீ'. சடங்கு, 'தீ' போன்ற படைப்புகளின் ஊடாக, பாலியலைப் பேசக் கூடாத ஒன்றாக கருதும் மனப்பாங்கை உடைத்து நிரவியிருந்தார் எஸ்.பொ.

அங்கே சென்றதும் மிக எளிமையாகத் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். அவர் பேசியது எதுவுமே எனது காதில் விழவில்லை. காரணம் அவர் பார்ப்பதற்கு எனது அப்பாவைப் போலவே இருந்தார். மேலதிக தங்குமிட பிரச்சினையைச் சொன்னார். மென்மை மனமும், சொல்வன்மையும் மிக்க ரவி.ஆறுமுகம் ஐ.பி.எஸ் எனது நினைவுக்கு வர அவருக்கு போன் செய்து விவரத்தைச் சொன்னேன். அவ்வளவுதான். என்ன எஸ்.பொ சென்னையில்தான் வசிக்கிறாரா?! அவருக்கு என் விசாரிப்புகளைச் சொல்லுங்கள். நான் மதிக்கும் மிக உயர்ந்த முற்போக்கு எழுத்தாளர். உடனே நீங்கள் கமிஷனர் அலுவலகம் சென்று கூடுதல் கமிஷனர் பாலச்சந்திரனைப் பாருங்கள். நான் அவருக்கு இப்போதே போன் செய்து சொல்கிறேன், என்றவர் எஸ்.பொவுடன் சிலவார்த்தைகள் பேசமுடியுமா என்று கேட்டு, அரைமணிநேரம் அவரோடு பேசிக்கொண்டிருந்தார். அவர்களது உரையாடலில் வந்து விழுந்தது 'தீ' என்ற சொல்.

பிறகு கட்டாயப்படுத்தி என்னைத் தன்னுடன் மதிய உணவு உண்ண வைத்த எஸ்.பொ எனது எழுத்துக்களில் எதையும் படித்திருக்கிறீர்களா செயந்தன்? என்றார். நான் ஒரு துண்டு இஞ்சியை விழுங்கியவனைப் போல விழித்தேன். இலக்கியம் வாசிப்பீர்கள்தானே? என்றபடி உள்ளே எழுந்து சென்றவர். தீ, சடங்கு ஆகிய நாவல்களை என்னிடம் கொண்டு வந்து தந்தார். இரண்டுமே பழைய பதிப்புகள்.

பிறகு அங்கிருந்து காரில் கமிஷனர் அலுவலகம் சென்று பாலச்சந்திரனைச் சந்தித்துக் கூடுதல் அவகாசம் கிடைக்க கோரிக்கை வைத்தோம். அவர் அங்கிருந்து கோடம்பாக்கம் காவல் நிலையத்துக்குக் கூப்பிட்டுச் சொல்ல, நாங்கள் காவல் நிலையம் சென்று பிரச்சினை இல்லாமல் திரும்பினோம். ஒரு எழுத்தாளனாகவும், கல்வியாளனாகவும் இருந்ததால் அவருக்கு நீட்டிப்புக் கிடைத்தது. அன்று மாலை வீடு திரும்பியதும் இரவு 'தீ' நாவலைப் புரட்ட ஆரம்பித்தேன். காய்ந்த புற்களை மேய்வதைப்போல் புகைந்துகொண்டிருந்த எனது நவீன வாசிப்புக்கு உண்மையாகவே தீமூட்டியது எஸ்.பொவின் 'தீ'. சடங்கு, 'தீ' போன்ற படைப்புகளின் ஊடாக, பாலியலைப் பேசக் கூடாத ஒன்றாக கருதும் மனப்பாங்கை உடைத்து நிரவியிருந்தார் எஸ்.பொ.

அதன்பிறகு அவரை நான் அப்பா என்றே அழைக்க ஆரம்பித்தேன். அவரது புலம்பெயர் சோகத்தின் பின்னணியில் இருந்த ஈடுசெய்ய முடியாத இழப்புகளைத் தெரிந்து கொண்டேன். அவரது ஆஸ்திரேலிய, நைஜீரிய பேராசிரியப்பணி அனுபவங்களைத் தெரிந்து கொண்டேன். பல மாலைகளில் யுகபாரதிக்குத் தெரியாமல் அவருடன் சூளைமேடு பாரில் மடங்க மடங்க மது அருந்தியிருக்கிறேன். அவர் வழியாக ஈழ இன விடுதலைப்போரின் அரசியலைப் புரிந்திருக்கிறேன். அவர் திரும்பவும் ஆஸ்திரேலியா திரும்பும்வரை அவரது கொச்சையான வசவுகளையும், இலக்கியப் பகிர்தலையும் கலவையாய் ரசித்திருக்கிறேன். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, எஸ்.பொ எனும் தனி மனிதனின் பாசத்தை நுகர்ந்திருக்கிறேன்.

ஆஸ்திரேலியாவில் எழுதத் தொடங்கிய தனது 1500 பக்க சுயசரிதையான 'வரலாற்றில் வாழ்தல்' நூலை அவர் சென்னையில்தான் நிறைவு செய்து அச்சிட்டார். அது எஸ்.பொவின் வாழ்க்கை வழியே ஈழத்தின் அரசியல் வரலாற்றையும் ஈழ இலக்கியப் போக்குகளையும் பதிவு செய்திருக்கும் மாபெரும் ஆவணம். அவரது சுயசரிதையை முன்வைத்துக் கல்கிக்காக அவரை நேர் கண்டு எழுதியதையும் மறக்கமுடியாது.

அப்பா எஸ்.பொ .. நிம்மதியாய்ப் போய்வா... உன் கலகத் தடங்களில் எங்கள் எழுத்துக்கள் தொடரும்... இந்தப் பூமியெங்கும் அவை பற்றிப் படரும்..

## செய்திச் சித்திரம்




# வாசகர் திருமுகம்

## அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தனியார் பஸ் சேவைகள்

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகளால் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங் கடங்களை எதிர்கொள்வதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மிகப்பெரிய தொகையை முதலீடு செய்து பஸ்களைக் கொள் வனவு செய்துவிட்டு, வழித்தட அனுமதியைப் பெறுவதற்குப் பல லட்சங்களை வாரியிறைத்த இவர்களின் நிலையை எண்ணிப் பார்க்கும் போது வருத்தம் ஏற்படுகின்றது. நெருக்கடியான வேளைகளில் இவர்கள் மக்களுக்கு உதவியதை எவரும் மறந்துவிட முடியாது. இந்த நிலையில் தற்போது சேவை யில் ஈடுபடும் நான்கு ரயில்களுக்கு மேலதிகமாக ஐந்தாவதாக இன்னொன்றும் சேவையில் ஈடுபடுத்தப் படப் போவதாக வெளிவந்த செய்திகள் ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிச்சயமாக மகிழ்ச்சியை அளிக்கப் போவதில்லை.

குடாநாட்டைப் பொறுத்த வரையில் உள்ளூர் மக்களின் போக்குவரத்துத் தேவைகளைத் தனியார் பஸ்களே அதிகளவில் நிறைவேற்றி வருகின்றன. சிறிது நிமிட இடைவெளியில் இந்த பஸ்கள் அடிக்கடி வருவதால் பயணிகள் தாமதமின்றித் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். அரச பஸ்கள் அநேகமாக அரை மணிக்கொரு தடவை இயக்கப்படுவதால் குறுகிய தூரங்களுக்குச் செல்லும் பயணிகள் தனியார் பஸ்களை அதிகளவில் நாடுவதைக் காண முடிகின்றது. அந்த வகையில் பயணிகளின் தேவைகளையும், விருப்பங்களையும் அறிந்து சேவையாற்ற வேண்டிய கடப்பாடு தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு உண்டு.

இந்த நிலையில் தவறிழைக்கும் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்னாயக்கா தெரிவித்துள்ளதை நாம் இங்கு முக்கியமாகக் கருத்தில்கொள்ள வேண்டும்.

ஒரு சில தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இழைக்கின்ற தவறுகள் அனைவரையுமே பாதித்து விடுகின்றன. மினி பஸ்களில் அளவுக்கும் அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், பயணிகளிடத்தில் தரக்குறைவாக நடந்து கொள்ளுதல், அதிக ஓசையில் பாடல்களை ஒலிபரப்புதல், பஸ்களில் ஏறும்போதும், இறங்கும் போதும் பயணிகளை அவசரப்படுத்துதல், மீதித் தொகையான சில்லறையை வழங்காது தவிர்த்துவிடல், வேறு பஸ்களுடன் போட்டி போட்டுக் கொண்டு பஸ்களை அதிவேகமாகச் செலுத்துதல் என்பன பயணிகளால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளில் சிலவாகும்.

மினி பஸ்களில் அளவுக்கும் அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதால் பெண்கள் பல வகையிலும் இடையூறுகளை எதிர்கொள்வதைக் காண முடிகின்றது. மனச்சாட்சியற்ற ஆண்களின் தவறான நடவடிக்கைகளுக்கும் பெண்கள் ஆளாகி வருகின்றனர். ஆனால் பஸ் சாரதிகளோ அல்லது நடத்துநர்களோ இதைச் சிறிதளவும் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. இந்த அவல நிலை உடனடியாகத் தவிர்க்கப்படல்வேண்டும்.

பொதுவாகவே உலகம் முழுவதும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் முக்கிய இடத்தை வகித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இதுவொரு இலாபமீட்டக்கூடிய துறையாகவும் காணப்படுகின்றது. எமது நாட்டைப் பொறுத்தளவில் இதை நவீன மயப்படுத்தி பயணாளிகளுக்குச் சௌகரியமான சேவைகளை வழங்க வேண்டியது தனியார் போக்குவரத்து அமைச்சின் முக் கிய கடமையாகும். குறிப்பாக பயணிகள் ஏறுவதற்கும் இறங்கு வதற் குமென இரண்டு வழிகளுள்ள பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது மிகவும் அவசியமாகும். ஒரே வழியால் ஏறுவதாலும் இறங்குவதாலும் பயணிகள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் போக்குவரத்து அமைச்சு தனியார் பஸ் சங்கத்துடன்கலந்து பேசிபயணிகளுக்கு உகந்த பஸ்சேவையைவழங்குவது காலத்தின் அவசியமான தேவையாகும்.

*ராஜராஜன்*

# சிறுவர்




## குரங்கும் முதலையும்



ஒரு ஊருக்கு வெளியே ஆறு ஒன்று இருந்தது. ஆற்றின் கரையில் ஒரு நாவல் மரம். அதில் இருந்த நாவல் பழங்களைத் தின்று குரங்கு ஒன்று உயிர் வாழ்ந்து வந்தது.

ஒருநாள் ஆற்றில் இருந்த முதலைஒன்றுநாவல்பழம்தின்று கொண்டிருந்த குரங்கைப் பார்த்து'நாவல்பழம் மிகவும் ருசியானதா?' எனக் கேட்டது. குரங்கும்..முதலையாரே! உமக்கும் சில நாவல் பழம் பறித்துத் தருகிறேன். சாப்பிட்டுப் பாருங்கள் என்று நாவல் பழங்கள் சிலவற்றை பறித்து ஆற்றில் வாயைப் பிளந்து கொண்டிருந்த முதலையின் வாயில் போட்டது. முதலையும் பழத்தை ருசித்து விட்டு.. குரங்கிடம் மேலும் சில பழங்க்ளை தனது மனைவிக்கு வாங்கிச் சென்றது.

முதலையின் மனைவி அப் பழங்களை சாப்பிட்டு விட்டு முதலையிடம்..இந்தப்பழங்கள் இவ்வளவு இனிக்கிறதே..இதே பழத்தை எப்போதும் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்அந்தகுரங்கின்குடல்எவ்வளவுஇனிக்கும்! அதுஎனக்குவேண்டும்.என்றது. முதலையும் குரங்கிடம் வந்து நயவஞ்சகமாக.'குரங்கே!..நாவல் பழம் தந்த உனக்கு என் மனைவி விருந்திட விரும்புகிறாள்.. வா.. என்றதும். குரங்கும் மகிழ்ந்து, முதலையின் முதுகில் உட்கார்ந்து ஆற்றில்.. முதலையின் இருப்பிடம் செல்லத் தொடங்கியது.

பாதித் தூரம் வந்ததும்..இனி குரங்கால் நீரில் தனித்து தப்பிக்க முடியாது என எண்ணிய முதலை.. மடக் குரங்கே!.. உண்மையில் விருந்து உனக்கல்ல. என் மனைவிக்குத்தான். அவள்தான் உன் குடலைச்சாப்பிட விரும்புகிறாள் என்றது. சற்று நேரம் யோசித்த குரங்கு "முதலையேஅதைமுதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா.. நான் எனது குடலை கழற்றி மரத்தில் அல்லவா வைத்திருக்கிறேன்.. திரும்பி மரத்தடிக்கு என்னைக் கொண்டு போ. குடலை எடுத்து மாட்டிக் கொண்டு வருகிறேன்..' என்றது.

முதலையும்முன்பின்யோசிக்காது.. குரங்கு உண்மை சொல்வதாக எண்ணிக் கொண்டு அதைத் திரும்ப மரத்தடிக்கு அழைத்து வந்தது, வேகமாக மரத்தில் ஏறிய குரங்கு "முட்டாள் முதலையே எவராலாவது குடலை உடலிலிருந்து கழற்றி மாட்ட முடியுமா? உன்னை நம்பிய என்னை ஏமாற்றி விட்டாயே.. நியாயமா? என்று கேட்டது. முதலையும் ஏமாந்து திரும்பியது. நாங்களும் எவரையும் எடுத்தவுடன் நம்பக்கூடாது. அவர்கள் நல்லவர்களா.கெட்டவர்களா எனத் தெரிந்து கொண்டே நட்புக் கொள்ள வேண்டும் ஆபத்துக் காலத்தில் எங்களுடைய மூளையை உபயோகித்து..ஆபத்திலிருந்து விடுபட வேண்டும்.

## பொது அறிவு

1) உலகில் மிகப்பெரிய விலங்கு எது? திமிங்கிலம்
2) உலகில் உயரமான விலங்கு எது? ஒட்டகச்சிவிங்கி
3) உலகில் மிக உயரமான மலை எது? இமயமலை
4) உலகிலேயே பெரிய தீவு எது? கிறீன்லாந்து
5) உலகிலேயே பெரிய கண்டம் எது? ஆசியாக்கண்டம்

## துணுக்குகள்....

தேனீக்கு இரண்டு இரைப்பைகள் உள்ளன. ஒன்று சேமிப்பு அறையாகவும்,' மற்றொன்று ஜீரண உறுப்பாகவும் பயன்படுகிறது.

மண்புழுக்களில் ஆண், பெண் என்ற தனித் தன்மை கிடையாது.

பாலில் இல்லாத சத்து இரும்புச்சத்து.

**TV கள் மலிவு விற்பனைக்கு**

Samsung LED 32" 38, 000/=
Samsung LED 24" 29, 000/=
With 1 year Warranty
**Market Price**
~~66 000~~ - 38 000/= ~~44 000~~ - 29 000/=
**Contact num- 077 746 7538**
**No-59, Nalliahs Store, Old Park Rd, Jaffna.**
(41560) (4.6.3)

**துன்பம் தீர அருள்வாக்கு**



குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப்பிரச்சினைகள், வெளிநாடு செல்லத்தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் -தீர அருள் வாக்கு கூறப்படும்.
வெள்ளவத்தை பெர்ணாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள்

**பூசை நேரம்:**
**காலை 10.30 மணி**
**மாலை 04.00 மணி**

**29, 30, /11/ 2014, 01/12.2014**
ஆகிய நாள்களில் யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறவுள்ளார்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
ஞான வைரவர் ஆலயம்
கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 077 801 2226
தமிழ் கலாசார உடையுடன் வரவும்.
(45.3)(54393)



உ
சபரிமலை யாத்திரை செல்வோருக்கும், மாலை அணிந்த சுவாமிமார்களுக்கும் பிரத்தியேக அறையில் ஆசார முறைப்படி உணவு வழங்கும்பணி **"மலாயன்க பே"**யில் தொடர்ந்து நடைபெறுவதை சகல ஐயப்ப பக்தர்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம்.
**குறிப்பு:**
01. வேலணை கந்தன் கடவை பெரும்படை ஸ்ரீ ஹரிகரபுத்திர ஐயனார் ஆலயத்தில் மூன்றுவேளை இலவசமாக உணவுப்பணி 60 நாள்களும் **மலாயன் கபே** அனுசரணையுடன் நடைபெறுகின்றது என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.
02. தூரதேசத்தில் இருந்து வரும் சுவாமிகள் முன்கூட்டியே தொடர்புகொள்ளவும்
**மலாயன் கபே** (41665) (45.6.3)
**தொடர்பு:** 021 222 2373 077 791 7753

**வான் விற்பனைக்கு**

DAIHATSU ATRAI(HIJET) MODEL - JAPAN - வான் (சிறிய வான்) பெற்றோல் HE xxxx (A/C) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 871 9515 (41672) (5.6.3)

**சைவ உணவகம் வாடகைக்கு**

சுன்னாகம் ரயில் நிலையம் முன்பாக (ஸ்ரீஅரசன் உணவகம்) சகல தளபாட வசதிகளுடனும், நிலம் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட, உணவக வியாபார அனுமதிப்பத்திரத்துடன் கூடிய கடை உடன் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 871 9515 (41573)(5.6.3)

**விற்பனைக்கு**

15- XXXX இலக்க NISSAN TOYOTA CAREENA
**- கார் விற்பனைக்குண்டு.**
தொடர்பு: **077 953 4638** (சி.17905) (45.3)

**மணமகள் தேவை**

1980ஆம் ஆண்டு பிறந்த, அவிட்டம் 3ஆம் பாதம், 12 இல் செவ்வாய் 60½ கிரகபாவம் உடைய யாழ் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அரச உயர் தொழில் புரியும் மணமகனுக்கு இந்து மணமகள் தேவை.
தொடர்பு: **077 165 2010** (41555) (45.6.3)

**இடம் வாடகைக்குத்தேவை**

போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட தையல் தொழிலகத்திற்கு 500 சதுர அடிக்கு குறையாத இடம் யாழ்நகரை (Town) பகுதியில் பெரியளவு முற்பணம் இன்றி மாதாந்த வாடகைக்கு உடனடியாகத் தேவை. (41558) (45.6.3)
077 048 8322, 077 736 0353

**ஓய்வு பெற்றுவிட்டீர்களா?**

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு
**குறிப்பு:** முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ பணியாற்றலாம்.
- 2 வாரப் பயிற்சிக் காலமுடையது
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- **பணி நிலையங்கள்:**
யாழ்ப்பாணம், சாவகச்சேரி, முல்லைத்தீவு, நெல்லியடி, கிளிநொச்சி

**அடிப்படைத் தகைமைகள்:**
- G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை **10.12.2014** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
**விளம்பர இல. 5032,**
**C/O உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(41444) (45.3)

## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்து



இன்று(28.11.2014)
வெள்ளிக்கிழமை
தனது 60ஆவது பிறந்தநாளை
கொண்டாடும் எனது நண்பன்
**தம்பிஜயா கணேசமூர்த்தி**
அவர்களுக்கு எனது
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு,
அவர் இன்னும் பல்லாண்டு
காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துபவர்:
**நண்பன் த.நிர்மலானந்தம்**
**நவக்கிரி, புத்தூர்.**

Best Wishes

(41544)(5.3)

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

வலி.தெற்கு பிரதேசசபையின் மேற்பார்வையாளராக கடமைபுரியும்
**தம்பிஜயா(பரராசசிங்கம்) கணேசமூர்த்தி**

ஊரவரும் சுற்றத்தாரும்
மூர்த்தியென வழங்கும்
உத்தமன் கணேசமூர்த்தி
இறைவழிபாடுடையான்
கார்தவழும் இணுவையூர்
கந்தசுவாமிகோயிலுக்கு
கவின்பெறு பள்ளியறை
மூர்த்திதனை வார்த்தளித்தார்.
பார்போற்ற வாழ்ந்த தம்பிஜயா
வெனவழங்கும் புரவலன்
பரராசசிங்கம் செய்தவத்தால்
வந்தோன் சார்ந்த தோற்றப்
பொலிவுடைய செம்மல்
சற்றும் வாட்டமின்றிப்
பல்லாண்டு வாழியவே!
சுபம்! சுபம்!! சுபம் !!!



Best Wishes

வாழ்த்தி மகிழ்வோர்:
திரு. கதிர்காமநாதன்,
திரு.திருமதி தில்லைநாதன்
திரு.திருமதி ஜெகதீஸ்வரன்
குடும்பம்.

ஈஸ்வரி இல்லம்,
பாடசாலை வீதி, முத்தட்டு மடம்,
கோண்டாவில் மேற்கு.

**வாழ்த்துக்களுக்கு : 0777 656 413, 021 300 8246** (41559)(5.6.3)


# அரசியல்

# மஹிந்தவால் இனி தூங்கவே முடியாது

## அரசின் பற்களை ஒவ்வொன்றாகப் பிடுங்குவோம் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ.28

அரசின் மொத்தப் பற்களையும் ஒன்றொன்றாகக் கழற்றி எடுப்போம். மஹிந்தவின் தூக்கத்தைக் கெடுப்போம் – என்று கூறியுள்ள ராஜித சேனாரத்ன, தமது புலனாய்வுப் பிரிவினர் சிறந்தவர்கள் என்று மார்தட்டும் மஹிந்தவுக்கு பொது வேட்பாளர் யாரென்று கடைசிவரை தெரியாது போய்விட்டது. அவரது போட்டியாளரை அவருடனே வைத்துக் கொண்டிருந்தார் – என்றும் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக்கட்சியின் மாகாண, மாவட்ட உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசில் இருந்து வெளியேறுவோம் என்று கூறினோம். அதை இன்று செய்து காட்டிவிட்டோம். ஜனநாயகத்தை வென்றெடுக்கும் புதிய கூட்டணியை உருவாக்கிவிட்டோம் – என்று அவர் தெரிவித்தார்.

உருவாக்கப்பட்டுள்ள கூட்டணி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் உரிமைகளுக்கான கூட்டணி – என்று குறிப்பிட்டுள்ள அவர், அதில் சகல மக்களின் உரிமைகளும், சுதந்திரமும் தங்கியுள்ளன என்றும் கூறினார். அனைவரும் கை கோர்த்து எமது பயணத்தை வெற்றிப் பயணமாக்க வேண்டும் – என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் அரசில் இருந்து வெளியேறியமை ஜனாதிபதியுடனான தனிப்பட்ட விவகாரத்தால் அல்ல. நாட்டில் அவர் சர்வாதிகாரியாக உருவெடுத்து விடக் கூடாது என்பதற்காகவே – என்று அங்கு சுட்டிக்காட்டிய ராஜித, எமக்குக் கட்சியை விடவும் நாடுதான் முக்கியம். துணிந்து களத்தில் இறங்கிவிட்டோம் – என்றும் கூறினார்.

அரசில் இருந்து நாளுக்குநாள் உறுப்பினர்கள் வெளியேறுவார்கள் என்று கூறிய அவர், அரசின் முழுப்பற்களையும் ஒரே தடவையில்பிடுங்கிவிட நினைக்கவில்லை. ஒவ்வொன்றாகவே பிடுங்குவோம். இன்னும் சில நாள்களில் அரசின் முக்கிய பற்களைக் கழற்றுவோம். நாம் அதைச் செய்து காட்டுவோம்.ஜனாதிபதியால்இனித் தூங்க முடியாது. – என்றும் தெரிவித்தார்.

போரையும், தனக்கெதிரான சக்திகளையும் இனங்கண்டு கொண்டது தனது புலனாய்வுப் பிரிவினரை வைத்தே என்று மார்தட்டிக் கொள்ளும் ஜனாதிபதிக்கு, தனக்கு எதிரான வேட்பாளரை கண்டுபிடிக்க முடியவில்லை. எதிரணி வேட்பாளரைத் தன்னுடவே வைத்துக் கொண்டு வெளியே தேடினார் – என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார். (ந)

## த.தே.ம.மு. அலுவலகம் மீது தீவிர கண்காணிப்பு

யாழ்ப்பாணம், நவ.28

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனது பிறந்தநாள் மற்றும் மாவீரர் தினம் என்பவற்றை முன்னிட்டுதமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அலுவலகம் இராணுவத்தினரால்தீவிர காண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அலுவலக நுழைவாயிலில் சிவிலுடையில் இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும் நடமாடினர் என்றும், அதனால் அலுவலகத்தை அண்மித்துள்ள பொது மக்கள் அச்ச நிலையுடன் காணப்பட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ந)


உதயன்
விளம்பர
தொடர்புகளுக்கு
021 567
1111


## பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கும் அபாயம்

### எச்சரிக்கின்றது பொதுபல சேனா அமைப்பு

கொழும்பு, நவ.28

2009ஆம் ஆண்டு அடக்கப்பட்ட பிரிவினைவாத பயங்கரவாதம், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் தலைதூக்கும் ஆபத்து இருக்கின்றது என்று கூறியுள்ளார் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

நிறைவேறாத தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள புலிகளும், முஸ்லிம் பயங்கரவாதிகளும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று அந்த அமைப்பு நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்களின் அழுத்தங்களுக்கு எந்தவேட்பாளரும் இடமளிக்கக்கூடாது என்று கோரியுள்ள அவர், கடந்த 12 நாள்களாக நாடுமுழுவதும்உள்ள பௌத்த மக்கள், பௌத்த அமைப்புகள் மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆகியவற்றுடன் நடத்தப்பட்ட பேச்சின்பின்னர் பொதுபல சேனா தனது தீர்மானங்களை எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் காலங்களில் தமது அமைப்பு பெரியளவில் மாற்றங்களை ஏற்படுத்த எண்ணியுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (ந)


## மணிவிழா அழைப்பு



**திரு.சிவபுண்ணியம் சிவலிங்கம்**
(ஓய்வுநிலை பிரதி அதிபர்)
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
(சேவைக்காலம் 1984-2014)

நூல் வெளியீடு: **சிவாமிர்தம்**
இடம்: **நினைவு மண்டபம்,யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**
காலம்: **29.11.2014 (சனிக்கிழமை)** நேரம் : **மு.ப.9.30 மணி**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

மணிவிழாக் குழு
மாணவர்கள்,
**யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.**
தொடர்புகளுக்கு : 077 606 2800,077 662 1745

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




10.11.2014 அன்று நடைபெற்ற
யாழ். பல்கலைக்கழகத்தின்
30 ஆவது பொதுப் பட்டமளிப்பு
விழாவில் நுண்கலைமாணி
(BFA) பட்டத்தினைப் பெற்ற
செல்வி **லாவண்யா**
**அருமைத்துரை**
அவர்கள் மேலும் பல
பட்டங்கள் பெற்றுப் பல்லாண்டு
காலம் வாழ்க என
வாழ்த்துகின்றோம்,

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,சகோதரர்கள்.
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

# விளம்பரங்கள்

## துணுக்காய், மல்லாவி, ஐயன்குளம், பொதுச்சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழிஇறைச்சி கடைகளுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல்-2015

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்**
:-28.11.2014 -12.12.2014
(அலுவலக நேரத்தில்)

**கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி**
:-12.12.2014 பி.ப 14.30 மணி வரை

**கேள்வி திறக்கப்படும் திகதி**
:-12.12.2014 பி.ப 14.30 மணி

**கேள்வி திறக்கும் இடம்**
:-துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், துணுக்காய் பிரதேசசபை , துணுக்காய் என்ற முகவரிக்கு மூலப் பிரதி, பிரதி ஆகியவற்றை தனித்தனி உறையிலிட்டு அவற்றை மீண்டும் ஓர் உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும்.

**இறைச்சிக்கடை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 17,400.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 211,000.00 | 2,500.00 | 500.00 |
| 03 | கோழிறைச்சிக்கடை | துணுக்காய் | 17,400.00 | 1,500.00 | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 43,200.00 | 1,500.00 | 500.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 1,677,500.00 | 2,500.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 245,960.00 | 1,500.00 | 500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | ஐயங்குளம் | 10,500.00 | 1,500.00 | 500.00 |
| 08 | மாட்டிறைச்சிக் கடை | ஐயங்குளம் | 102,400.00 | 2,500.00 | 500.00 |
| 09 | கோழி இறைச்சிக்கடை | ஐயங்குளம் | 10,500.00 | 1,500.00 | 500.00 |

**பொதுச்சந்தை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 20,000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1,309,000.00 | 1,500.00 | 500.00 |
| 03 | ஐயங்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஐயங்குளம் | 20,000.00 | 1,500.00 | 500.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவரிற்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்விப்படிவ கட்டணம்,கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12%பெறுமதி சேர் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்
5. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
6. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
7. எம்மால் நிரணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
8. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
9. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
10. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**வீ.இராசரத்தினம்**
தவிசாளர்,
பிரதேசசபை, துணுக்காய்.

(சி/18010)(4.6.3)

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய காரியாலயத்தின் கீழ் வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2015 ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன

**கேள்வி இல: O&M/JAF/RM/EA/MEC/VEH/2014 (2015)**

01. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தின் கீழ்வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2015 ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்காக தகுதியான சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
02. யாழ் மாவட்டத்திற்கு தனியாகவும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தனியாகவும் விண்ணப்பிக்க வேண்டும்.
03. எமது தலைமைக் காரியாலயத்தில் மேற்கூறப்பட்ட சேவைக்காக பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
04. சேவை வழங்குநர்கள் கேள்வியுடன் தங்களது வியாபார பதிவுச் சான்றிதழின் போட்டோ பிரதி (Business Registration Certificate) மற்றும் சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதிப்பத்திரத்தின் போட்டோ பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப்பத்திரங்களை கீழ் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய சுயமாக தயாரித்து விண்ணப்பிக்கலாம்.
06. தங்களால் கோரப்படும் கேள்விகள் கேள்வி முடிவு தினத்திலிருந்து 400 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
07. இக் கேள்வி அறிவித்தல், இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சகல சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டதாகும்.
08. தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் முடிவு திகதி குறிப்பிடப்பட்டு, **கேள்வி கோரல் சபை, பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிராந்திய முகாமையாளர் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கேள்விகள் அனைத்தும் **09.12.2014, 14.00** மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினமே உடனடியாகத் திறக்கப்படும்.

**தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தின் கீழ்வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2015 ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. நிறுவனத்தின் பெயர் : ..............................
2. உரிமையாளர் பெயர் : ..............................
3. வியாபார முகவரி : ..............................
..............................
..............................
4. வியாபார பதிவுச் சான்றிதழ் இலக்கம் : ..............................
5. வியாபாரத்தின் தன்மை : ..............................
6. வியாபாரத்தில் எத்தனை வருட அனுபவம் : ..............................
7. 2013/2014 ஆம் ஆண்டுகளில்
தேசிய நீர் வழங்கல் : ..............................
வடிகாலமைப்புச் சபைக்கு : ..............................
தூய்விப்புச் செய்திருந்தால் : ..............................
அதுபற்றிய விபரங்கள் : ..............................
8. நிறுவனத்தின் பாவனையாளர் : ..............................
விவரங்கள் : ..............................
..............................
9. தூய்விப்புச் செய்யப்படும் வாகன வகைகள் மற்றும் தூய்விப்பிற்கான கூலி/செலவு
: Double Cap - ரூபா. Lorry - ரூபா.
: Three wheeler - ரூபா. Tractor - ரூபா.
: Water Bowser - ரூபா. Jeep - ரூபா.
: Motor Bike - ரூபா. JCB - ரூபா.
: Trooper - ரூபா. Crew Cab - ரூபா
: Boom Truck with Boom - ரூபா
(தனித்தனியாக விவரம் இணைககப்படல் வேண்டும்)
10. கடன் அனுமதிக்கப்படும் காலம் : ..............................
11. தொடர்புகொள்ள வேண்டிய நபர் : ..............................
12. தொலைபேசி இல : ..............................
13. தொலைநகல் இல : ..............................
14. கையொப்பம் : ..............................

குறிப்பு: நிறுவனத்திற்குரிய உத்தியோகபூர்வ முத்திரை (Seal) கையொப்பத்துடன் பதிக்கப்படல் வேண்டும்

**பிராந்திய காரியாலயம்,
தேசிய நீர் வழங்கல்
வடிகாலமைப்புச்சபை,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**பிராந்திய
முகாமையாளர்
(யா) யாழ்ப்பாணம்.**

(சி/18016)(4.6.3)

# உலகச் செய்திகள்



## காங்கிரஸில் இணைவு தி.மு.க. பரப்புரை பீரங்கி

சென்னை, நவ.28

நடிகை குஷ்பு காங்கிரஸ் கட்சியில் இணைந்துள்ளார். தி.மு.க பரப்புரை பீரங்கியாக முன்னர் செயற்பட்டு வந்த நடிகை குஷ்பு, சொந்தக் கட்சியினராலேயே செருப்பு வீசப்பட்டு, வீடு தாக்கப்பட்டு மனமுடைந்தார். அதையடுத்து அவர் தி.மு.கவில் இருந்து வெளியேறினார். அதன் பின்னர் எந்த ஒரு அரசியல் கட்சியிலும் சேராமல் சினிமாவில் முழுக் கவனம் செலுத்தி வருகிறார். ஆனால் அவரை தங்களின் கட்சியில் சேர்க்க சில அரசியல் கட்சிகள் தயாராக உள்ளன.

இந்த நிலையில் குஷ்பு பா.ஜ.கவில் சேரப் போவதாக தகவல்கள் வெளியாகின.ஆனால் அவ்வாறு வந்தசெய்தியில் உண்மைஇல்லை. அதை எல்லாம் நம்பாதீர்கள் என்று குஷ்பு தமது டுவிட்டரில் தெரிவித்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் டில்லியில் காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தியை சந்தித்து அந்தக் கட்சியில் இணைந் துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, "தி.மு.கவில் எனக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்படவில்லை, அதனால் ஓராண்டுக்கு முன்பே தி.மு.கவை விட்டு விலக முடிவு செய்தேன். காங் கிரஸ் கட்சி மீது எனக்கு ஈடுபாடு உண்டு.அதனால் தான் காங்கிரஸில் சேர்ந்துள்ளேன். இந்தியாவின் ஒற்றுமைக்கான ஒரே கட்சி காங்கிரஸ்தான். இப்போது தான் நான் உரிய இடத்துக்கு வந்து சேர்ந்துள்ளேன் "– என்றார். (ரி)

# இந்தியா எதிர்ப்பு

## ஐ.நாவின் சாவுத் தண்டனை கட்டுப்பாட்டுத் தீர்மானத்துக்கு

ஐ.நா. பொதுச்சபையில் சாவுத் தண்டனைக்கு எதிரான தீர்மானத்தை எதிர்த்து இந்தியா வாக்களித்துள்ளது.

உலகில் சாவுத் தண்ட னையை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக இருந்து வருகிறது. ஆனா லும் இந்தியா, சீனா போன்ற பல நாடுகளில் கொடூர குற்றங்களை செய்தவர்களுக்கு சாவுத்தண்டனை விதிக்கும் முறை உள்ளது. இந்தநிலையில், சாவுத் தண்டனை விதிப்பதில் கட்டுப்பாடு வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இதற்கான வரைவு தீர்மானத்துக்கு சமூக, மனிதாபிமான, கலாசாரவிவகாரங்களைகவனிக்கும் ஐ.நா. பொதுச் சபையின் 3 ஆவது குழு கடந்த வாரம் ஒப்புதல் அளித்தது.அந்த தீர்மானத்தில், சாவுத் தண்டனை விதிப்பதில் உறுப்பு நாடுகள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், 18 வயதுக்கு குறைந்தவர்கள், கர்ப்பிணிப் பெண்கள்,மனநிலைபாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்கள் செய்த குற்றத்துக்காக சாவுத் தண்டனை விதிக்கக் கூடாது என்றும் கூறப்பட்டிருந்தது.

அந்தத் தீர்மானத்தின் மீது பொதுச்சபையில் வாக் கெடுப்பு நடைபெற்றது. தீர்மானத்தை ஆதரித்து 114 நாடுகள் வாக்களித்தன. இந்தியா உள்ளிட்ட 36 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. 34 நாடுகளின் பிரதிநிதிகள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தனர். இதுகுறித்து ஐ.நா. சபைக்கான இந்திய குழுவின் செயலாளர் மாயங் ஜோஷி கூறும் போது,

"ஒவ்வொரு நாட்டுக்கும் தனது சட்ட திட்டங்களின்படி குற்றவாளிகளைத் தண்டிக்கும் உரிமை உள்ளது. இந்த அடிப்படை இறையாண்மை உரிமையை அங்கீகரிக்க இந்தத் தீர்மானம் தவறிவிட்டது. இந்தியாவில் மிகவும் அபூர்வமாகத்தான் சாவுத் தண்டனை விதிக்கப்படுகிறது. சமுதாயத்துக்கு அச்சுறுத் தலை ஏற்படுத்தும் வகையில் கொடூர குற்றங்களை செய்தவர்களுக்குத் தான் சாவுத் தண்டனை விதிக்கப்படுகிறது. அத்தகைய நபர் களுக்கும், தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பதை நிரூபிப்பதற்கு தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்கான வாய்ப்பு உள்ளிட்ட சட்ட ரீதியிலான அனைத்து வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன" என்றார். (ரி)

## உலகின் 2ஆவது உயரமான மின்மாற்றி மே.வங்கத்தில்



உலகின் இரண்டாவது உயரமான மின்மாற்றி மேற்கு வங்காள மாநிலம் ஹால்டியாவில் அமைக்கப்படுகிறது. 236 மீற்றர் உயரம் கொண்ட இரட்டைக் கோபுரங்கள் எச்.ஈ.எல் –600 மெகாவோல்ற் மின் உற்பத்தி நிறுவனத்தில் அமைக்கப்படுகிறது.

ஹூக்ளி நதியின் குறுக்கே 600 மெகாவோல்ற் மின்சாரம் உற்பத்தி செய்யும்திறனுடன் அமைந்துள்ள ஹால்டியா ரைச்சாக் ஆலையில் நாட்டின் மிக உயரமான இந்த மின் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. (ரி)



## ஹொலிவூட் படத்தில் வந்த பியானோ ரூ.20 கோடி ஏலம்

நியூயோர்க், நவ.28

ஹொலிவூட் படமொன்றில் இடம்பெற்ற பியானோ ஒன்று ரூ.20 கோடிக்கு ஏலம் போயுள்ளது. கடந்த 1942ஆம்ஆண்டு ஒஸ்கார் விருது பெற்ற கஸ்பி லான்சர் என்ற படத்தில் இந்த பியானோ முக்கிய இடத்தை வகித்தது.

இந்தப் பியானோவை நடிகர் சாம்டுலே வில்சன் இசைத்து நடித்திருந்தார். இந்த பியானோ சமீபத்தில் நியூயோர்க்கில் ஏலம் விடப்பட்டது.

ஏலத்தின் முடிவில் அந்தப் பியானோ ரூ.20 கோடிக்கு ஏலம் போயுள்ளது. இத்துடன் சேர்ந்து ஹொலிவூட் நடிகர்கள் பயன்படுத்திய 200 பழங்கால பொருள்களும் ஏலத்துக்கு விடப்பட்டன. (வ)

## தலைசிறந்த பூங்காக்களில் ஒன்றாக தமிழகத்தின் உதகை



உலகின் தலைசிறந்த பூங் காக்களில் ஒன்றாக உதகை ரோஜா பூங்கா திகழ்கிறது என்று உலக ரோஜா சம்மேளனத் தலைவர் ஸ்டீவ் ஜோன்ஸ் புகழாரம் சூட்டி னார்.

உதகை தாவரவியல் பூங்காவின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 10 ஏக்கர் பரப்பில் உதகை ரோஜா பூங்கா ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, 4 ஆயிரம் வகைகளில், 40 ஆயிரம் ரோஜாச் செடிகள் பராமரிக்கப் படுகின்றன. கடந்த 2006ஆம் ஆண்டு ஜப்பான் சர்வதேச ரோஜா மாநாட்டில் இந்தப் பூங்கா, தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த பூங்காவாகத் தெரிவு செய்யப்பட்டது. இந்தப் பூங்காவில் ஒரே இடத்தில் பல்வேறு வண்ண 40 ஆயிரம் ரோஜா செடிகள் பூத்துக் குலுங்குவதைப் பார்வையிட ஆண்டு தோறும் லட்சக்கணக்கான சுற்று லாப் பயணிகள் வரு கின்றனர்.(ரி)

## மிகப் பழமையான தண்ணீர் கனடாவில் கண்டுபிடிப்பு

றொறொண்டோ, நவ.28

கனடாவில் உலகின் மிகவும் பழமையான தண்ணீர் கிடைப்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.



பிரிட்டனில் உள்ள, லங்காஸ்டர்பல்கலைக் கழகத்தின் சுற்றுச் சூழல் துறையைச் சேர்ந்த டாக்டர் கிரெக் ஹாலந்து மற்றும் இரண்டு விஞ்ஞானிகள் அதுகுறித்த ஆய்வில் ஈடுபட்டனர். ஆன்ட்ரியோவில் உள்ள டிமின்ஸ் சுரங்கத்தில் ஏழாயிரம் அடி ஆழத்தில் எடுக்கப்பட்ட தண்ணீர், டேட்டிங் எனப்படும் தொழில் நுட்ப முறை மூலம் அதில் உள்ள ஜெனான் தனிமங்கள், வாயுக்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. சோதனைக்கு உட்படுத்தப்பட்ட தண்ணீர் கடைசியாக எப்போது பூமியுடன் தொடர்புடையது என்பதை, ஜெனான் தனிமத்தைக் கொண்டு கண்டறிய முடியும்.

இந்த ஆய்வின்படி, கனடாவின் டிமின்ஸ் சுரங்கத்தில் எடுக்கப்பட்ட தண்ணீர் 150 கோடி ஆண்டுகள் பழமையானது என்பது விஞ்ஞானிகளின் ஆய்வில் தெரியவந்துள்ளது. (வ)

## தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்க அபாயமணி ஒலிக்கும் தொழில்நுட்பம்

எல்லையில் தீவிரவாதிகள் ஊடுருவினாலோ, வேலியை உடைத்து அத்துமீறினாலோ, சுரங்கம்தோண்டினாலோ அபாயமணி ஒலிக்கும் வகையில் தொழில்நுட்பம் பயன்படுத்தப் படவுள்ளது.



பிரதமர் நரேந்திர மோடி காஷ்மீருக்கு நாளை சுற்றுப் பயணம் செய்ய உள்ள நிலையில் எல்லையில் தீவிரவாதிகள்துப்பாக்கிச் சூடு நடத்தியதால் பதற்றம் நிலவுகிறது. கடும் கண்காணிப்பையும் மீறி இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகள் அவ்வப்போது ஊடுருவி நாசவேலைகளை அரங்கேற்றி வருகின்றனர். இதற்குப் பாகிஸ்தான் மறைமுக உதவி செய்வதாக இந்தியா தொடர்ந்து குற்றஞ் சாட்டி வருகிறது.

இந்தநிலையில்காஷ்மீர் மாநிலம் அர்ணியா பிரிவில் உள்ள கத்தார் என்றஇடத்தில்தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. தீவிரவாதிகளின் நடமாட்டத்தை எல்லை பாதுகாப்புப்படையினரும் உறுதிப்படுத்தியுள்ளனர். பிரதமர் நரேந்திர மோடி நாளை காஷ்மீர் செல்ல உள்ள நிலையில் தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளமை. பாதுகாப்பு குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது. இதன் காரணமாக அங்கு எல்லைப் பாதுகாப்புப் படையினர், ராணுவம் மற்றும் பொலிஸார் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர். (ரி)

# உலகச் செய்திகள்



## 54 வயதில் ஓய்வு பெறும் கம்போடிய யானை

கம்போடிய தலைநகர் நொம் பென்னில் மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக சேவை செய்த யானை ஓய்வுபெற்றுச் செல்கிறது.
சம்போ என்ற பெயருடைய 54 வயதுடைய அந்த யானை, 1980 ஆண்டு தொடக்கம் வட் நொம் தேவாலயத்தில் சேவை செய்து வந்தது. சுற்றுலா பயணிகளை முதுகில் சுமந்து சென்று தலைநகரின் அழகைக் காண்பிப்பது சம்போவின் வேலையாக இருந்து வந்தது.
காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இரண்டு வருடங்களாக சம்போவுக்கு தற்காலிக ஓய்வு வழங்கப்பட்டது.
இந்த யானையின் பயணத்தால் தலைநகரில் வாகன நெரிசல் ஏற்படுகின்றமை பற்றியும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றைப் பரிசீலித்த உத்தியோகத்தர்கள், மதச்சடங்குகள் மூலம் அதனை ஆசீர்வதித்து ஓய்வில் செல்ல அனுமதி வழங்கியுள்ளனர். (வ)

## தீவிரவாதத்தை எதிர்கொள்ள மலேசியாவில் தனிச் சட்டம்

கோலாலம்பூர், நவ.28
மலேசியாவில், பயங்கரவாதத் தடுப்புக்கான தனிச்சட்டம் ஒன்றை இயற்ற அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.
மலேசியாவிலிருந்து சென்று ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் இணைந்துள்ள பலர் அந்த அமைப்பின் கொள்கைகளைப் பரப்புவதற்காக தாயகம் திரும்பவுள்ளார்கள் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்ளவே மலேசிய அரசு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தவிருப்பதாகக் கூறப்படுகிறது. (வ)

## ஆஸி. ராணுவம் மீது பாலியல் குற்றச்சாட்டு

சிட்னி, நவ.28
ஆஸ்திரேலிய இராணுவத்தில் தவறான பாலியல் நடத்தை மற்றும் அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்ளும் 1100 பேருக்கும் அதிகமானவர்கள் இன்னமும் பணியில் உள்ளனர் என்று ஒரு விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.
ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையினரில் சிலர் மேலும் அவ்வகையிலான தவறுகளை மீண்டும் செய்யக்கூடும் என்றும் அந்த விசாரணை அறிக்கை கூறுகிறது.
1940 கள் முதல் ஆஸ்திரேலியப் படையினரின் முறைகேடான நடவடிக்கைகள் குறித்து விசாரிக்க, அரசால் அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணைக் குழுவுக்கு சுமார் 2500 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
அவற்றில் 80 முறைப்பாடுகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்



பட்டுள்ளன, 40 முறைப்பாடுகளில் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.
படையில் பணியாற்றுபவர்களில் மூத்த பதவிகளில் இருப்பவர்கள் இவ்வகையிலான தவறுகளைச் செய்துள்ளனர் என்று தெரியவந்தால், அது பாதுகாப்புப் படையினர் மீதான பொது மக்களின் நம்பிக்கையை குலைத்துவிடும் என்றும் அந்த விசாரணை அறிக்கை எச்சரித்துள்ளது.
இதேவேளை ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சி வழங்கும் மையத்திலும் இவ்வகையிலான துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுவது குறித்து பொது விசாரணை ஒன்று நடைபெற வேண்டும் என்று மேலும் ஒரு அறிக்கை பரிந்துரைத்துள்ளது. (வ)

## கிரீஸில் கடலில் தத்தளிக்கும் அகதிகள்: மீட்புப் பணி தீவிரம்

எதென்ஸ், நவ.28
கிரீஸில் கப்பலொன்று பழுதடைந்ததால் நடுக்கடலில் தத்தளிக்கும் அகதிகளை மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்டோரை ஏற்றிக் கொண்டு ஒரு கப்பல் கிரீஸ் கடல்பகுதியில் சென்று கொண்டிருந்தது. அந்தக் கப்பல் இயந்திரக் கோளாறு காரணமாக, கிரிட்டி தீவுப் பகுதியில் நின்றுவிட்டது. தகவலறிந்த கிரீஸ் கடற்படை அதிகாரிகள் அங்கு விரைந்துள்ளனர். கப்பலில் வந்த அனைவரும் பத்திரமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கப்பலில் வந்தவர்கள் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டாலும், கிரீஸ் அதிகாரிகள் அந்தத் தகவலை உறுதி செய்யவில்லை. (வ)

## பாக். போலியோ முகாம் மீது சூடு சுகாதார ஊழியர்கள் நால்வர் சாவு

இஸ்லாமாபாத், நவ.28
பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்து வழங்கச் சென்ற 3 பெண்கள் உள்ளிட்ட 4 மருத்துவப் பணியாளர்கள் தலிபான் பயங்கரவாதிகளால் நேற்று முன்தினம் புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.
உலகில் போலியோ நோய் முற்றிலுமாக ஒழிக்கப்படாத 3 நாடுகளில் மிக முக்கியமான நாடான பாகிஸ்தானில் போலியோ தடுப்பு மருந்து வழங்கப் படுவது மதத்துக்கு விரோதமானது என்ற அடிப்படையில் இதற்கு முன்னரும் அங்கு இஸ்லாமியப் போராளிகள் போலியோ தடுப்பு முகாம்களைக் குறி வைத்துத் தமது தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர்.
இந்த நிலையில் சமீபத்தில் நடைபெற்ற இந்தத் தாக்குதல் குறித்து பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில், "மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி தாங்கிய இரு




நபர்கள் தென் மேற்கு நகரமான குவெட்டாவில் பாதுகாப்பு முகாம் ஒன்றில் காத்திருந்த சுகாதார ஊழியர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியதாகவும் இதில் 3 பெண் ஊழியர்களும் ஒரு ஆணும் அந்த இடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் 3 பேர் காயம் அடைந்ததாகவும் கூறியுள்ளனர்.
இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஓர் ஊழியர் குவெட்டாவின் பொது மக்கள் மருத்துவமனையில் இருந்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கும் போது பாதுகாப்பு ஏற்பாடுகள் போதியதாக இருக்கவில்லை என்று கூறியுள்ளார். மேலும் 'டாவ்ன்' பத்திரிகையில் காயம் அடைந்த பெண் ஒருவர் தெரிவித்ததாக வெளியாகியுள்ள செய்தியில் –
'சம்பவம் நடைபெற்றபோது எமக்கு மிக அருகேதான் பொலிஸார் ஒருவர் காவல் காத்துக் கொண்டிருந்தார். ஆனால் எமக்கு உதவி செய்ய அவர் முன்வரவில்லை.
மேலும் நாம் பலரை எமக்கு உதவி புரியவருமாறு கூக்குரலிட்டோம். ஆனால் எவரும் வரவில்லை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஆண்மையை அதிகரிப்பதற்காக பாம்பு வைன் பருகும் ஜனாதிபதி

வடகொரியாவின் ஜனாதிபதியான கிம் ஜோங்–உன் மதுபானப் பிரியர் என்பது தெரிந்த விடயம். அவர் தற்போது தனது ஆண்மையையும், ஆயுளையும் அதிகரிக்க நல்ல பாம்பில் இருந்து தயாரிக்கப்படும் வைன் மதுபானத்தை தினமும் அளவுக்கு அதிகமாகப் பருகி வருகிறார். இதற்காக அவருடைய மாளிகைக்கு விசேடமாக பாம்பு வைன் தயாரித்து அளிக்கப்பட்டு வருகிறது.
31 வயதுடைய கிம் ஜோங்–உன் பருமனாக இருப்பதால் அவருடைய மனைவி ரிஜோல்–சு தாய்மை அடைவதில் பிரச்



சினை உள்ளதாகவும், இதனால்தான் கிம் ஜோங்–உன் நல்ல பாம்பு வைனைத் தொடர்ந்து பருகி வருகிறார் எனவும் கூறப்படுகிறது.
நாட்டின் ஜனாதிபதியே இப்படி பாம்பு வைன் பருகுவதற்குக் காரணமும் உண்டு. வடகொரியாவில் குழந்தைப் பேறு இல்லாவிட்டால் ஆண்கள், ஆண்மைச் சக்தியைப் பெருக்கிக் கொள்ள பாம்பு வைன் பருகுவது என்பது தொன்றுதொட்டு பழக்கமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)


## ஹைதி ஜனாதிபதியை பதவி விலகுமாறு ஆர்ப்பாட்டப் பேரணி

ஹைதி ஜனாதிபதி மிச்செல் மார்ட்டெலியைப் பதவி விலகக் கோரி, அந்த நாட்டின் தலைநகரில் பிரமாண்டமான பேரணி நடைபெற்றது. இதில் சுமார் இரண்டாயிரம் பேர் கலந்து கொண்டு ஜனாதிபதிக்கு எதிராக முழக்கமிட்டனர். ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.
பேரணியின்போது வன்முறைகள் நிகழாமல் தடுக்க நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (வ)

# பல்சுவை

## மண்பானைச் சமையலின் மகத்துவம் தெரியுமா?

நமது பாட்டிகாலத்தார் எல்லோரும் மண் பானையில் தான் சமைத்தனர். எவ்வளவு ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால் இப்பொழுது நாம் அதைக் கைவிட்டு நோயை விலைகொடுத்து வாங்குகின்றோம். மண்பானையில் சமைப்பது பாரம்பரியமாக தமிழகத்தில் உள்ள வழக்கம். தற்போது தினம்தோறும் புதிது புதிதாக பலவகை உலோக பாத்திரங்கள் அறிமுகம் ஆகின்றன. அவற்றைப் பயன்படுத்தினால்தான் அவற்றின் நன்மை தீமைகளை அறிய முடியும். ஆனால் அது போல் இல்லாமல் மண்பானைகள் பல நூற்றாண்டுகளாக ஆரோக்கிய சமையலுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மண்பானைகளில் சமைக்கும்போது உணவின் மீது வெப்பம் சீராக, மெதுவாகப் பரவுகிறது. இது உணவைச் சரியான முறையில் சமைக்க உதவுகிறது. மேலும் மண் பானைகளில் உள்ள நுண்துளைகள் மூலம் நீராவி, காற்று உணவில் ஒரே சீராக ஊடுருவி உணவைச் சமைக்க உதவுகின்றன. இதனால் மண் பானைகளில் சமைக்கும் உணவு ஆவியில் வேக வைத்த உணவைப் போன்ற தன்மையைப் பெறுகிறது. இது உடல் நலனுக்கு உகந்தது. இதனால் உணவில் உள்ள சத்துக்கள் பாதுகாக்கப்பட்டு, எளிதில் செரிமானமாகும்



CW K

தரமான உணவு கிடைக்கிறது.

மண் பாத்திரங்கள் உணவில் உள்ள அமிலத்தன்மையைச் சமப்படுத்தும் தன்மை கொண்டவை. உப்பு, புளிப்பு சுவையுடைய உணவுகள் சமைக்கும்போது, மண்பானை தீங்கான விளைவுகள் எதையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் உலோக பாத்திரங்கள் உணவுடன் வினைபுரியும் நிலை உள்ளது. மண்பானையில் சமைக்கும் போது, அதிக எண்ணெய்பயன்படுத்தவும்தேவையில்லை. எனவே மண்பானையில் சமைக்கும் உணவு மிகவும் ஆரோக்கியமானதாகும்.

## ஞானச்சுடர்



ஆன்மிக சிந்தனை

மனத்தூய்மை இன்றிச் செய்யப்படும் பக்தி உரிய பலனை, உயர்ந்த பலனைத் தருவதில்லை. உள்ளத்தில் காமம், கோபம், பொறாமை, கள்ளம், கபடு போன்றவற்றை வைத்துக் கொண்டு செய்யப்படும் பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்க்க மாட்டான். மனிதன் மனந்திருந்தி தூய வாழ்க்கையும், தியான வாழ்க்கையும் மேற்கொண்டால் வீடுபேறு அடைய முடியும். பழிக்குப் பழி வாங்கத் துடிப்பது ஆன்மிகமல்ல, பிறர் குற்றத்தை மன்னிப்பதுதான் ஆன்மிகம். நாமும் எமக்குத் தீமை செய்தவர்களை மன்னித்து நன்மை செய்து வாழ வேண்டும். பிறரது குற்றத்தை மன்னித்து வாழ்பவன் மகிழ்ச்சியோடும் மன அமைதியோடும் வாழ்வான்.

## நாளை

**கார்த்திகை-13 சனிக்கிழமை | 29.11.2014**

திதி: அட்டமி பி.இ.04.08 வரை
நட்சத்திரம்: அவிட்டம் காலை 07.04 வரை

சுபநேரம்:03.13-04.43 வரை
இராகுகாலம்: 9.13-10.43 வரை

## செல்போன், இணையம் அதிகம் பயன்படுத்தும் நாடு டென்மார்க்

செல்போன் மற்றும் இணைய பயன்பாட்டில் உலகின் முதல் நாடாக டென்மார்க் திகழ்கிறது. இதற்குமுன் இந்த இடத்தில் இருந்த தென்கொரியாவை அது இரண்டாம் இடத்துக்குத் தள்ளியுள்ளது. மூன்றாவது இடத்தில் சுவீடன். அதனைத் தொடர்ந்து ஐஸ்லாந்து மற்றும் பிரிட்டன் நாடுகள் உள்ளன என்று சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம் தெரிவித்துள்ளது. ஆசியா தலைமையிலான நாடுகள் சார்பில் ஹொங்கொங் உலக தரவரிசையில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் அமெரிக்கா 14 ஆவது இடத்தில் உள்ளது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### அன்பு என்பது தெய்வீக சக்தி

எந்தவொரு சமயத்திலும் ஆரம்ப நிலையில் ஒருவன் கடவுளை எஜமானாகவும் தன்னை அவருடைய வேலைக்காரனாகவும் நினைக்கிறான். தனது அன்றாட தேவைகளையும் மற்றவற்றையும் அவர் நிறைவேற்றி வைப்பதற்காக அவரிடம் நன்றியுணர்வு கொள்கிறான். அத்தகைய நினைப்புக்களையெல்லாம் ஒதுக்கி வையுங்கள். ஆனால் வலிமையான மனத்தை இழுக்கும் சக்தி இருக்கிறதே, அதுதான் கடவுள். அந்த இழுக்கின்ற சக்திக்கு அடங்கியே சூரியனும் சந்திரனும் மற்ற எல்லாமே இயங்குகின்றன. இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொன்றும் நல்லதானாலும் சரி, கெட்டதானாலும் சரி, கடவுளுக்கே சொந்தம். எமது வாழ்க்கையில் எது நடந்தாலும் நல்லதானாலும் கெட்டதானாலும் சரி, கடவுளே அதை எமக்குத் தருகிறார். நாம் நன்மையைச் செய்தாலும் அல்லது தீமையைச் செய்தாலும் அதைச் செய்விக்கின்ற சக்தியாக அன்பு இருக்கிறது. கடவுள் அன்பே வடிவானவர். அவர் எல்லாவற்றிலும் மறைந்திருக்கிறார். அவர் ஒவ்வொன்றிலும் தெளிவாக பார்க்கக் கூடியவராக இருக்கிறார். ஒவ்வொருவரும் தெரிந்தோ தெரியாமலோ அவரிடம் இழுக்கப்படுகிறோம். ஒரு பெண் தனது கணவனிடம் அன்பு செலுத்தினால், தனது கணவனிடமுள்ள கடவுளாகிய மகத்தான ஈடுபாடே அவளை அவனிடம் அன்பு செலுத்தத் தூண்டுகிறது. என்பதை அவள் அறிவதில்லை.நாம் வழிபட வேண்டியது. கடவுளாகிய இந்த அன்பு ஒன்றையே. நாம் அவரை உலகத்தை படைத்தவராகவும், காப்பவராகவும் நினைத்துக் கொண்டிருக்கும்வரையில் புறவழிபாட்டை மட்டுமே செய்ய முடியும்.

ஆனால் அவற்றையெல்லாம் கடந்து சென்று அவரை அன்பின் உருவமாகவும் எல்லாவற்றிலும் அவரையும் – அவரில் எல்லாவற்றையும் காணும்போது மட்டுமே மிக மேலான பக்தியை நாம் அடைகின்றோம்.



## சிறுவர்களின் பற்சிதைவை தடுக்கும் புதிய பொருள்

சிறுவர்களுக்கு பற்சிதைவு, பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதைத் தடுப்பதற்கான புதிய பொருள் (ஸ்வீட்கம்) ஒன்றை அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 5 மாணவர்கள் கூட்டாகக் கண்டுபிடித்துள்ளனர். சர்க்கரை மூலம் தயாரிக்கப்பட்ட இந்தப் பொருள் பற்சிதைவைத் தடுத்து குணப்படுத்தும் என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இதை பெங்களூரில் குடிசைப் பகுதிகளில் வசிக்கும் சிறுவர்களுக்கு விநியோகிக்க அக்ஷய பத்ரா என்ற அமைப்புடன் அந்த மாணவர்கள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இதன் மூலம், கோடிக்கணக்கான இந்தியச் சிறுவர்கள் பயன் அடைவார்கள் என்று அவர்கள் கூறினர்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | | 2 | 3 | 6 | | | |
| | 2 | | | 5 | | | | |
| | | 7 | 8 | | 4 | | | |
| 8 | 9 | | | | | 6 | | |
| | 7 | 4 | 6 | 8 | 1 | 3 | 2 | |
| | | 1 | | | | | 5 | 7 |
| | | | 9 | | 5 | 2 | | |
| | | | | 6 | | | 4 | |
| | | | 3 | 4 | 8 | | 9 | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 5 | 3 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 9 | 7 | 8 | 2 | 5 | 4 | 6 | 3 | 1 |
| 3 | 2 | 6 | 1 | 7 | 9 | 8 | 4 | 5 |
| 4 | 5 | 2 | 8 | 9 | 7 | 1 | 6 | 3 |
| 8 | 6 | 3 | 5 | 2 | 1 | 4 | 9 | 7 |
| 7 | 9 | 1 | 6 | 4 | 3 | 2 | 5 | 8 |
| 2 | 1 | 9 | 4 | 3 | 5 | 7 | 8 | 6 |
| 6 | 3 | 4 | 7 | 1 | 8 | 5 | 2 | 9 |
| 5 | 8 | 7 | 9 | 6 | 2 | 3 | 1 | 4 |

# ஜோதிடம்

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி? 02.11.2014 - 2017



27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

## இடபம்



***இடப ராசி நேயர்களே!***

இந்த ராசியில் பிறந்தவர்கள், எல்லோரையும் வசியப்படுத்தக்கூடிய அளவுக்கு அழகான தோற்றத்தைக் கொண்டிருப்பார்கள். நடுத்தர உயரம் கொண்டவர்கள் என்றாலும் கம்பீரமான தோற்றம் இருக்கும், நீண்ட கழுத்தும் அகன்ற மார்பும் விரிந்த தோள்களும் அழகான அங்க அமைப்புகளுடன் அமைந்திருக்கும். இவர்களின் கண்களுக்கு தனி அழகுண்டு. பற்கள் அழகாக இருக்கும். குட்டையான விரிந்த மூக்கும் அழகான அடர்ந்த முடியும் இருக்கும். இவர்களுக்கு நீண்ட ஆயுள் மற்றும் புகழ், கௌரவம், அந்தஸ்து யாவும் அமையும். ரிஷப ராசிக்காரர்கள் சாமர்த்தியமாகவும், சாதுர்யமாகவும், வேடிக்கையாகவும், கவர்ச்சியாகவும் பேசும் ஆற்றலுடையவர்களாக இருப்பார்கள்.

இருந்தபோதிலும் பழக்கமில்லாத புதிய நண்பர்களுடனும், விருந்தாளிகளுடனும் புதிதாகப் பழக்கம் ஏற்படுத்திக் கொள்வதில் சற்றுச் சங்கடப்படுவார்கள். வார்த்தைகளை அளந்து பேசும் இவர்களின் பேச்சில் உறுதி காணப்பட்டாலும் பிறர் தமது வார்த்தைகளில் குற்றம் குறை கண்டுபிடிக்காதவாறு பேசி, பிறர் தமது பேச்சை வெல்ல இடம் தராது, பேச்சில் தனக்கென தனிப்பாணியை வைத்திருப்பார்கள். நல்ல ஞாபக சக்தி கொண்டவர்கள். தற்பெருமைக்கும், புகழ்ச்சிக்கும் ஆசைப்படாதவர்கள். ஆதலால் எதற்கும் உணர்ச்சிவசப்படமாட்டார்கள். பிறருக்கு உதவி செய்வதிலும் தன்நலம் கருதாது செயலாற்றுவார்கள். தன்னம்பிக்கையும் தைரியமும் கொண்டவர்கள். பார்ப்பதற்கு சாதாரணமானவர்கள் போல இருந்தாலும் எவர் வம்புக்கு வந்தாலும் ஓட ஓட விரட்டியடிப்பார்கள். "சாதுமிரண்டால் காடு கொள்ளாது" என்பது இவர்களுக்குப் பொருந்தும். எவருக்கும் எளிதில் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். ஆடம்பரமாக இல்லாவிட்டாலும் சுத்தமான உடைகளை உடுத்தவே ஆசைப்படுவார்கள். வெண்மை நிறம் இவர்களுக்கு மிகவும் பிடிக்கும். எந்தக் கஷ்டத்தையும் தாங்கக்கூடிய சகிப்புத் தன்மையும் கொண்டிருப்பர்.

கடந்த இரண்டரை வருட காலமாக உமது ராசிக்கு 6ஆம் வீட்டில் இருந்து அபாரமான பலன்களை வாரி வழங்கினார். கடன் தீர்ந்தது. நோய் அகன்றது. பகை விலகியது. தற்சமயம் 2.11.2014 சனி உமது ராசிக்கு 7ஆம் வீட்டில் வந்துள்ளார். இது கண்டச் சனி என்பதால் உமது நலனிலும், உமது மனைவியின் உடல் நலனிலும் கூடுதல் கவனம் தேவை. கூட்டுத் தொழில் செய்வோர் ஒருவரை ஒருவர் அனுசரித்துப் போவது மிகவும் நன்று. பண வசதியில் குறைவில்லை. சனி உமது ராசிக்கு 9ஆம் இடமான தர்மஸ்தானம் பத்தாம் இடமான தர்ம என தர்மகர்மாதிபதி யோகம் தருபவர். சனி 9க்கு உடையவர் என்பதால் உமக்கு தீமை செய்ய மாட்டார் என்பது விதி. 1,5,9 உடையவர் பாபியே ஆனாலும் சுப பலனையே தருவார் என்பது விதி.

சனி பகவான் 3,7,10 பார்வையினால் உமது ராசிக்கு 9,1,4 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

உமது ராசிக்கு 9 ஆம் வீட்டைப் பார்வை செய்வதால் புதிய முதலீடுகள் பெருகும். சிலர் தர்மபரிபாலன அறக்கட்டளை அமைக்கவும் இடமுண்டு. சிலர் திருப்பணிகள் செய்ய இடமுண்டு.

தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. ஸ்திர சொத்து வாங்க இடமுண்டு. இரும்பு, மின்சார பொருள்கள், கட்டுமானம், ஏற்றுமதி, இறக்குமதி போன்றவற்றில் முதலீடு செய்வது நன்று. 9ஆம் வீடு பாக்கியஸ்தானம். குரு பார்வை பெறுவது சிறப்பு. உமது ஜென்ம ராசியை சனி பார்வை செய்வதால், தந்தை மூலம் அனுகூலம் கிட்டும். ஸ்தான பேதம் உண்டாக இடமுண்டு.

புத்திரபாக்கியம் கிட்டும். குடல் சம்பந்தமான, கருவாக்கசிகிச்சை, ஆயுள் வேத பஞ்சகர்ம சிகிச்சை போன்ற அமைப்புக்கள் நடத்துவோர் மற்றும் அத்தகைய சிகிச்சைக்கு உட்படுவோர் மிகவும் அனுகூலம் பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

உமது ராசிக்கு சுகஸ்தானம் என்றும் 4வது வீட்டை சனி பார்ப்பதால் தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. கல்வி பயிலும் மாணவர்கள் கூடுதல் கவனத்துடன் படிக்கவும்.

சிலர் பழுதான வீடு, வண்டி, வாகனம் போன்றவற்றைச் சீர் திருத்தம் செய்வதற்கு வாய்ப்புள்ளது.

விண்வெளி, வானிலை ஆய்வு மற்றும் அரச வழியில் அனுகூலம் பெறும் தொழில் புரிவோர் மிகவும் அனுகூலம் பெற இடமுண்டு.

குருபகவான் உமது ராசிக்கு 3இல் இருப்பதால் சரளமான பணப் புழக்கம் உண்டு. இளைய சகோதர வழியில் ஏற்றம் கிட்டும். பின்பு 4இல் வருவதால் புதிய முயற்சியில் நேரடிக் கவனம் தேவை. தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. சிலர் புதியவீட்டில் குடி புகுவர்.

**உடல்நிலை –**

உங்களது உடல் நிலை சுமாராக அமையும். மனைவி, பிள்ளைகள் வழியில் மருத்துவச் செலவுகள் உண்டாகும். தேவையற்ற பயணங்களால் உடல் நிலையில் சோர்வு ஏற்பட்டாலும் அனுகூலங்கள், பணவரவுகள் அமைவதால் மகிழ்ச்சி ஏற்படும்.

**உத்தியோகத்தர்கள்**

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வு உண்டாகும்.

சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்கள் வீண் அலைச்சலை ஏற்படுத்தும். அதிகாரிகளின் ஆதரவுகள் மகிழ்ச்சியைத் தரும். வேலைப்பளு அதிகரித்து அதிக நேரம் உழைக்க வேண்டியிருந்தாலும் உடன் பணிபுரிபவர்களின் உதவிகள் கிடைக்கும்.

**மாணவர்கள் –**

மாணவர்களுக்கு கல்வியில் சற்று மந்தமான நிலை ஏற்பட்டாலும் விடா முயற்சியால் எதையும் சமாளித்து விடுவார்கள்.

விளையாட்டுப் போட்டிகளில் சற்றுக் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தேவையற்ற நண்பர்களின் சகவாசத்தைத் தவிர்க்கவும்.

**அதிர்ஷ்டக் குறிப்புகள்–**

எண் – 22, 32, 75, 78, 90, 102,
கிழமை – வியாழன், செவ்வாய்.
நிறம் – மஞ்சள், திசை – வடக்கு. கல்– புஸ்பராகம்,
தெய்வம் – தட்சிணாமூர்த்தி.

## அப்பிளின் அதிரடி முடிவு

அப்பிள் நிறுவனம் 2007ஆம் ஆண்டில் முதலாவது 'ஐ போனை' அறிமுகம் செய்ததிலிருந்து அவற்றின் இயங்கு தளங்களில் (ஐ.எஸ்.ஓ.) இயல்புநிலை தேடு பொதியாக கூகுளைத் தெரிவு செய்திருந்தது.

அதனைத் தொடர்ந்து அப்பிள் மற்றும் கூகுள் நிறுவனங்கள் 2010ஆம் ஆண்டில் இதற்காக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. அந்த ஒப்பந்தம் 2015ஆம் ஆண்டு முடிகின்றது.

இந்த நிலையில் அப்பிள் நிறுவனம் அதிரடி முடிவொன்றை எடுத்துள்ளது. 2015ஆம் ஆண்டிலிருந்து யாகூ அல்லது பிங் ஆகியவற்றில் ஒன்றை அப்பிளின் இயங்குதளத்தின் இயல்பு நிலை தேடுபொறியாக பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. மைக்ரோ சொப்ட் மற்றும் யாகூ நிறுவனங்கள் அப்பிள் நிறுவனத்துடன் சிறந்த உறவைப் பேணி வருகின்ற பின்னணியிலேயே அப்பிள் நிறுவனம் இந்த முடிவை எடுத்துள்ளது.

## தமிழில் பேசி தகவல் பெறலாம்

கூகுள் 'வொயிஸ் சேர்ச்' எனப்படும் ஒலி மூலம் தேடும் வசதியில் இதுவரை ஆங்கிலம் மட்டுமே இருந்து வந்த நிலையில், தமிழ் மொழியும் அதில் விரைவில் இணைத்துக் கொள்ளப்படும் என்று கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தத் தகவலை கூகுளின் இந்தியாவுக்கான தலைவர் ராஜன் ஆனந்தன் தெரிவித்துள்ளார். இதன் மூலம் அதிகளவானவர்களை கூகுளின் பக்கம் இழுத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## அமேசனின் புதிய சேவை

இணையத்தளம் மூலமான பொருள் கொள்வனவு தற்போது பிரபல்யமாகியுள்ளது. இணையத்தளம் மூலமான விற்பனையில் கொடிகட்டிப் பறக்கும் நிறுவனம் தான் அமேஷன் தளம். பல்வேறு வகையான சேவைகளை வழங்கி வரும் அமேஷன் இப்போது வாடிக்கையாளர்களுக்குப் புதிய சேவை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

தன்னிடம் பொருள்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்குப் பொருள்களை அனுப்பும் இந்த நிறுவனம் தற்போது, அந்தச் சேவையை உள்ளூர் அஞ்சல் அலுவலகங்கள் ஊடாகவும் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்தச் சேவை முதன்முறையாகப் பிரிட்டனில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. பிரிட்டனில் உள்ள சுமார் 16 ஆயிரம் அஞ்சல் நிலையங்கள் ஊடாக இந்தச் சேவை வழங்கப்படவுள்ளது.

## பேஸ்புக்கின் அடுத்த திட்டம்

பேஸ்டக் நிறுவனம் தனது பங்குச்சந்தை வருமானத்தை குறிவைத்து தினந்தோறும் ஏதேனும் புதியமுயற்சியை செய்து கொண்டே இருக்கிறது. இப்பொழுது அலுவலக பயன்பாட்டுக்கான ஒரு தளத்தை அது வடிவமைக்க உள்ளது என்று கூறப்படுகின்றது. சமூக வலைதளங்களில் முக்கிய இடத்தில் இருக்கின்றது பேஸ்புக். தற்போது அலுவலக உபயோகத்திற்கான பிரத்யேக தளத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதிக பயனாளர்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே அலுவலக ரீதியிலான உபயோகத்திற்கான இணையதளங்களாக 'லிங்கிடு இன்' போன்ற சில தளங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை சில நாடுகளில் சிறப்பாக உபயோகப்படுத்தப்பட்டாலும், அவை பேஸ்புக் போன்ற வரவேற்பையும் பயனீட்டாளர்களின் விருப்பங்களையும் அனைத்து நாடுகளிலும் பெறவில்லை.



## வருஷாப்திக அஞ்சலி

அமரர்
**சிவஸ்ரீ வேதக்குட்டிக் குருக்கள் நடராஜக்குருக்கள்**
அவர்கள்
(பிரதம குரு, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தானம்)

ஆண்டொன்று ஆனாலும்
ஆண்டுகள் பலவானாலும்
நீண்ட நும் உறவு நீளும்
நற்தவ சிவப் பணி தொடரும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் குடும்பத்தினர்.
பிரம்மஸ்ரீ பாலமுருகன் சர்மா குடும்பத்தினர்.
நீர்வைக் கந்தன் ஆலயம்.

(41588) (10.6)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை திருமதி தில்லைநாயகி **முத்தமிழ்ச்செல்வன்** அவர்களின் அருமைத் தந்தை


**கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்**

அவர்கள் 25.11.2014 இறைபதம் அடைந்தமையையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/18028) (10.6)

ஆசிரிய நலன்புரி சங்கம்
**மல்லாகம் மகா வித்தியாலயம்- மல்லாகம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி விஜயகலா மதன ஈஸ்வரன் அவர்களின் பாசமிகு தந்தை

**விஸ்வலிங்கம் வைத்தியநாதன்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(47946) (10.6)

ஊழியர் நலன்புரி சங்கம்
**வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி.**

## வருஷாப்திக ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



தோற்றம்
17.02.1940

மறைவு
08.12.2013

**அமரர் சிவஸ்ரீ வேதக்குட்டிக் குருக்கள் நடராஜக் குருக்கள்**

(யாழ். ஆவரங்கால் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்க சுவாமி கோயில் பிரதம குருக்கள்)

**திதி: பூர்வபக்க ஸப்தமி**

அன்பின் ஊற்றாய் அமைதியின் பிறப்பிடமாய்!
விகட மொழி பேசி சிரிக்க வைப்பீரே
இன்ப வாழ்வில் எமக்கு நல்வழி காட்டினீரே!
ஈகையின் பெறுமதி மொழிந்த எம் அன்புத் தந்தையே
சோதி மயமான இராமலிங்க சுவாமி பாதத்தில்
என்றும் பெருநிலை பெற வேண்டி நிற்கும்

**மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(41580)(10.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சிவசம்பு சிவராசா (குணம்)



தோற்றம் –14.06.1950

மறைவு –09.12.2013

**ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா!**
**அகலுமா உங்கள் பிரிவின் சோகம்**
**மறையுமா உங்கள் நினைவின் பாசம்**
**சிரித்த முகத்தோடு திருநீற்று பிரியனோடு**
**இருந்தீர்கள் என் அன்பு அப்பா!**

**ஆஞ்சநேயர் சந்நிதியில் உயிரைவிட்டு**
**எங்களை நிர்க்கதியாய், அநாதையாக**
**பரிதவிக்க விட்டு சென்றீர்களே அப்பா**
**காலம் ஆயிரம் போனாலும்**
**மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை**
**எங்கள் உயிர் உள்ளவரை**
**உங்கள் நினைவுகள் தொடரும்**

*ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

கண்ணகையம்மன் வீதி,
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
யாழ்ப்பாணம்.

(41575)(5.3.6)

**குடும்பத்தினர்.**

# செய்திகள்

# மாவீரரை எம் மனதிலிருந்து உங்களால் அகற்ற முடியாது

## மரநடுகை நிகழ்வில் அமைச்சர் ஐங்கரநேசன்



யாழ்ப்பாணம், நவ.28

மாவீரர்கள் எங்கள் இரத்த உறவுகள். எங்களுக்காக தன்னுயிர் தந்த மறவர்கள். அவர்களின் நினைவுக்கற்களைஅழிப்பதாலோ, நிகழ்வுக்குத்தடைவிதிப்பதாலோ அவர்களை எங்கள் மனங்களிலிருந்து உங்களால் அகற்ற முடியாது. இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாளான நேற்று, வரணியில் நடைபெற்ற மரநடுகை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லது வேறு போராளிகளோ இலங்கை அரசின் பார்வையில் பயங்கரவாதிகளாகத் தெரியலாம். ஆனால், அவர்கள் எங்களின் இரத்த உறவுகள். எங்களுக்காகத் தங்கள் உயிர்களைக் கொடுத்த தியாக சீலர்களுக்கு, யாரும்அஞ்சலிசெலுத்தக்கூடாது என்பதில் இராணுவம் மிகக்கவனமாக இருக்கிறது.

நினைவு நடுகற்களை அழிப்பதன் மூலமோ, நினைவு தின நிகழ்ச்சிகளுக்குத் தடை விதிப்பதன் மூலமோ மக்கள் மனங்களில் இருக்கும் நினைவுகளை ஒரு போதும் அழித்து விடமுடியாது என்பதை அரசோ, இராணுவமோ புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை.

நாங்கள் நடுகின்ற மரங்கள் வெறும் மரங்கள் அல்ல. மரங்களைத் தெய்வமாக வழிபட்ட மரபைக் கொண்டவர்கள் நாங்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் இந்து ஆலயங்களில் தல விருட்சங்கள் காணப்படுகின்றன. அது மட்டும் அல்லாது, சங்க இலக்கியங்களில்தமிழர்கள்மரங்களை உறவினர்களாகப் போற்றியதாகப் பதிவுகள் உள்ளன.

எனவே மரம் என்பது தமிழர்களின் வாழ்வியலில் உணர்வுபூர்வமாகக் கலந்துவிட்ட ஒன்று. எனவே அந்த மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் எமது உணர்வுகளுக்கு வடிகால் தேடுவதோடு, சுற்றுச்சூழலையும் பாதுகாத்துக்கொள்ளமுடிகிறது –என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், வே.சிவயோகன், ச.சுகிர்தன், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா, வலி. வடக்கு பிரதேசசபைத் தலைவர் சோ.சுகிர்தன்ஆகியோருடன்பொது மக்களும்கலந்துகொண்டு மரங்களை நாட்டி வைத்தனர்.

(த–5–106)

# வடமராட்சியிலும் தீவிர சோதனை

மாவீரர் தினத்தை முன்னிட்டு பலத்த இராணுவக் கெடுபிடிகளால் நேற்று முழுநாளும் வடமராட்சி மக்கள் பல்வேறு இன்னல் களைச் சந்தித்தனர். வடமராட்சியின் முக்கிய வீதிகளெங்கும் அளவுக்கதிகமான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீதிகளில் பயணித்த மக்கள் துருவி துருவி சோதனையிடப்பட்டனர்.

குறிப்பாக வீதிகளில் பயணம் செய்த மக்கள் உடற்சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவர்கள் கொண்டு சென்ற பொருள்களும் சோதனை யிடப்பட்டன.

நேற்று வடமராட்சியில் உள்ள ஆலயங்கள் தீவிர ராணுவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டதுடன் ஆலயத்தில் மணியடித்தால் கைது செய்யப்படுவீர்கள் என ஆலய பூசகர்களும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தனர். அத்துடன் மோட்டார் சைக்கிள்கள், பவள் கவச வாகனங்களில் ராணுவத்தினர் நடமாடியமையதையும் அவதானிக்கமுடிந்தது.(கு–108)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அன்னை மடியில்
28.04.1960

ஆண்டவன் அடியில்
29.10.2014

அமரர்
**இராசபாக்கியம் சச்சிதானந்தம்**
(உதயன் ஒலி, ஒளி அமைப்பாளர்)

எங்கள் இதயத்தில் என்றும் இருப்பவரே
தங்கள் பிரிவால் தாங்கொணா துயருறுகின்றோம்
அறிவூட்டி அன்பு பாராட்டி எம்மைக் காத்தவரே
தங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கடந்த 29.10.2014 இறைபதமடைந்த எமது குடும்பத்தின் தலைவர் அமரர் இராசபாக்கியம் சச்சிதானந்தம் அவர்களின் மரணச் செய்திகேட்டு எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழியிலும் உதவி புரிந்த நல் உள்ளங்கள் அனைவருக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (28.11.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் மண்டபத் தில் நடைபெறும். இத் தினத்தில் தாங்களும் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல. 85, பத்திரகாளி கோயிலடி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**
**T.P: 077 9563597**

**குடும்பத்தினர்.**

(41585)(10.6)

## செய்திகள்

# தடைகளையும் தாண்டி மாவீரருக்கு அஞ்சலி


## பல இடங்களில் ஈகச் சுடர்கள் கொழுந்து விட்டு எரிந்தன

யாழ்ப்பாணம், நவ.28

மாவீரர் தின நிகழ்வுகள், இராணுவப் பிரசன்னம், புலனாய்வாளர்களின் மிரட்டல்களுக்கு மத்தியில், அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி தாயகப் பிரதேசத்தில் நேற்று நடந்தேறியது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது இடத்தில், மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றப்பட்டு மாவீரர்கள் அஞ்சலிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் நேற்று தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் களத்தில் இல்லாமல் போனதன் பின்னர், இரகசியமாகவே மாவீரர் நாள் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. நேற்றைய தினமும் இர்ாணுவத்தினரின் கடும் கண்காணிப்பையும் மீறி மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசத்தில் நடந்தேறின.

மாவீரர் நாளான நேற்று, வடக்கு மாகாணம் முழுவதிலும் இராணுவத்தினர் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளை இறுக்கியிருந்தனர். அத்துடன் சோதனை நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியிருந்தனர். அத்துடன் புலனாய்வாளர்கள் சகல இடங்களிலும் கண்காணிப்புக்கள் மேற்கொண்டிருந்தனர். வடக்கு மாகாணம் முழுவதும் படைகளின் கண்காணிப்பு வலயத்தினுள் நேற்றுக் கொண்டுவரப்பட்டிருந்தது.




இதனையும் மீறி முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. நேற்று மாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் பொது இடத்தில், மாவீரர்களின் குடும்பங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடி மாவீரர் நாள் நிகழ்வுகளை அனுஷ்டித்துள்ளனர். மாவீரர் தின நிகழ்வின் முக்கிய நிகழ்வான, ஈகச்சுடரேற்றலை, வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் ஏற்றியுள்ளார்.

இதன்போது அங்கு உரையாற்றிய ரவிகரன், இன்றைய நாள் மாவீரர் நாள். தமிழ் இனத்தின் தேசிய வாழ்வுக்காக தமது வாழ்வின் சுகங்களை தியாகம் செய்து இந்த மண்ணில் விதையானவர்களே மாவீரர்கள். அவர்கள் எங்கள் மக்களின் பிள்ளைகள்.

இந்த நாளில் காலத்தால் சாகாத அந்த காவிய நாயகர்களை பூசித்து எம் நியாயமான உணர்வுகளை உலகின் முன் எங்கள் மக்கள் வெளிப்படுத்துகிறார்கள். உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்துவது மனித நாகரிகம் ஆகும். அந்த உலக பொது நாகரிகத்தையே எங்கள் மக்கள் இன்று நிலை நிறுத்தியிருக்கிறார்கள். இனியும் நிலை நிறுத்துவார்கள் - என்றார். (த-5)







**கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவு**
**கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க**
**விசேட பொதுக்கூட்டம்-2014**

இடம்:நாவலர் மடத்தில் பிரதான வீதியில் உள்ள மேற்படி சங்கத்தின் கிளை

காலம்: ஞாயிற்றுக்கிழமை 30.11.2014
முற்பகல் 10.00 மணி

தலைவர்: **பு.இராதாகிருஷ்ணன்**

பிரதம விருந்தினர்:
**வி.கே.அருந்தவநாதன்**
(கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.)

கௌரவ விருந்தினர்கள்:
**திருமதி Dr. ம.சகுந்தலா**
(கால்நடை வைத்திய அதிகாரி-கரவெட்டி)
**ஸ்ரீ குகதீப்**
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

அங்கத்தவர்கள் அனைவரையும் குறித்த நேரத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகின்றோம்.

பு.இராதாகிருஷ்ணன்
தலைவர்.

(சி/18018)
(4.6.3)

த.உமாப்பிரியா
செயலாளர்.

## மரண அறிவித்தல்



**திருமதி ஞானமலர் மனுவேற்பிள்ளை**

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் தற்போது மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானமலர் மனுவேற்பிள்ளை நேற்று (27.11.2014) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி மிக்கேல்ப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மனுவேற்பிள்ளையின் (KLA பண்டத்தரிப்பு) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி KL அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் (துரை) மற்றும் பொன்ராசு, பொன்மணி, பொன்மலர், தவம் (நோர்வே), குணம் (ஜேர்மனி), காலஞ்சென்ற குலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரன், ஜெயம் (டென்மார்க்), குலம் (ஓய்வு பெற்ற முகாமையாளர் HNB), றோஸ்விந்தா, புஸ்பா, வசந்தா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பாலுக்குட்டி, யோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மரிய நாயகி, ரஞ்சினி, ரதி, பஸ்ரியாம்பிள்ளை (Lawyer) , Dr. வீரசிங்கம் (அமலன் வைத்தியசாலை), கிளிமெற் நேரியோ (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், ஷாமினி (ஜேர்மனி), பிரியங்கா (SLT), பிளசட்மேரி, டானியல் (kist), சாமுவேல் (LB Finance), நிஷான், லூட்வி, சிந்தியா (டென்மார்க்), ஜெனன்ரன் (லண்டன்), டெஷான் (NDB), டினுஷா, சாம் (BOC), கிறேஸ் (BOC), மேரி லிதியா (தேனு), டினோ, லரிசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிருஷன், ஷைலி, நேற்ரா, யோசுவா, தியோரா, நற்றலின், அல்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (01/12/2014) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அமலன் வைத்தியசாலை,**
**உடுவில் வீதி, மானிப்பாய்.**

தகவல்: குடும்பத்தினர்
**தொ.பே:** 077 738 4820
(41591) 077 320 6578, 021 225 5099

## மரண அறிவித்தல்



**திருமதி பாலாம்பிகை கண்ணலிங்கம்** (பொன்னர்)

மலேசியா ஈப்போவைப் பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலாம்பிகை கண்ணலிங்கம் (பொன்னார்) 27/11/2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் நடேசர் கண்ணலிங்கத்தின் பாசம் நிறைந்த மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், திருமதிகளான து.தனேஸ்வரி, ச.லோகாம்பிகை, ந.கனகேஸ்வரி, ச.கனகாம்பிகை, க.இரத்தினாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதிகளான செ.இராசலஷ்சுமி, ச.பத்மாவதி, சி.ஜெயலஷ்மி, ந.பரஞ்சோதி, ந.ஜெகநாதன், ந.லோக நாதன் ஆகியோரின் மைத்துனியும், க.பிரபாகரன், க.விஷ்ணுகரன், க.சிவாஸ்கரன், காலஞ்சென்ற க.கிருபாகரன், திருமதி பு.தேவ சேனா (ஆசிரியை ஊரெழு கணேச பாடசாலை), க.கமலகரன் (முகாமையாளர் -பீப்பிள் லீசிங் கொம்பனி - சுன்னாகம்) ஆகி யோரின் பாசமிகு தாயாரும், திருமதி பி.றாஜினி, வி. உஷாந்தினி, சி.வாசுகி, நா. புவனேந்திரன் (தமிழிந்திரன் - யாழ். மத்திய கல் லூரி), திருமதி க. நிருபா (ஆசிரியை - வண்ணை நாவலர்) ஆகி யோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் சிவக்கிரியைகள் இன்று (28/11/2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் (ஊரெழு) நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப 1.30 மணியளவில் ஊரெழு மேற்கு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிவாக்கினியில் சங்கமமாகும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ந.கண்ணலிங்கம்**
(கணவர் - ஓய்வு நிலை எழுதுவினைஞர்)
077 547 8159

**ஊரெழு மேற்கு,**
**ஊரெழு.**
(41590)




## செய்திகள்

# வெள்ளத்தில் நீந்தும் கரையோரப் பகுதிகள்


### குடாநாட்டில் நேற்றுக் கொட்டித் தீர்த்த மழையால்

யாழ்ப்பாணம், நவ.28

நேற்றுக் காலை கொட்டி தீர்த்த கனத்த மழையால் யாழ்.கரையோரப் பகுதி எங்கும் வெள்ளக்காடாக மாறியுள்ளன. ஏற்கனவே வெள்ளம் ஏற்படாத பகுதிகளிலும் வெள்ளம் தேங்கிக் காணப்பட்டன. இந்தநிலையில் வெள்ளம் வழிந்தோடுவதற்காக ஏற்கனவே வாய்க்கால்கள் வெட்டப்பட்டதால் வெள்ளம் பாய்ந்து செல்கின்றது.

வசந்தபுரம், நித்தியஒளி மற்றும் கொட்டடி, மீனாட்சிபுரம் போன்ற பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. வெள்ளம் வழிந்தோட வீதியை ஊடறுத்து வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன. குறித்த வாய்க்கால் ஊடாக வெள்ளம் வழிந்தோடியது எனினும் வெள் ளத்தை முழுமையாக அகற்ற முடியாதுள்ளது என்று என்று பிரதேச மக்கள் தெரி வித்தனர்.

பொம்மைவெளி, உதய புரம், எழிலூர் போன்ற பகுதிகளில் தாழ்ந்த இடங்களில்



அதிகளவில் வெள் ளம் தேங்கி நிற்பதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுப் பெய்த மழையால் தாழ்ந்த வயல்களில் அதிகளவில் வெள்ளம் தேங்கியுள்ளது. அதனால் அவை வெள்ளத்தில் மிதக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தை அகற்றுவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டனர். விவசாயிகள் சிலர் வரம்புகளை வெட்டி வெள்ளத்தை அகற்றியதை காண முடிந்தது. (வ–17)

## கிளிநொச்சி டிப்போவுக்கு நியமனங்கள்

வடமராட்சி, நவ. 27

கிளிநொச்சி இ.போ.ச.டிப் போவுக்கு 6 சாரதிகளும் 13 நடத்துநர்களும் ஒரு பொது எழுதுவினைஞரும் மத்திய போக்குவரத்து சபையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆளணிப்பற்றாக்குறையுடன் இருந்த இ.போ.ச. டிப்போவுக்கு புதிதாக சாரதிகள், நடத்துநர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிர் காலத்தில் சீரான பஸ் சேவையை மேற்கொள்ள வாய்ப்புக்கிட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–173)




## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

### குத்தகைக்கான மீள்கேள்வி அறிவித்தல் –2015.

04.11.2014ம் திகதி கோரப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் 2015ம் ஆண்டுக்கு பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| இல | சந்தைகள்,(துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 15000.00 | 16,695,000.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை கோழி இசைச்சிக் கடை இல 1 | 500.00 | 5000.00 | 368,655.00 |
| 3. | திருநெல்வேலிச்சந்தை கோழி இசைச்சிக் கடை இல 2 | 500.00 | 5000.00 | 262,815.00 |
| | கொக்குவில் உப அலுவலகம் | | | |
| 1. | கொக்குவில் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 15000.00 | 789,810.00 |

கொக்குவில் சந்தை புதிய கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்

| இல | இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | கொக்குவில் உப அலுவலகம் | | | |
| 1. | கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை இல 1 | 500.00 | 5000.00 | 375,661.00 |
| 2. | கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை இல 2 | 500.00 | 5000.00 | 375,661.00 |
| 3. | கொக்குவில் சந்தை கருவாட்டுக்கடை இல 1 | 500.00 | 5000.00 | 86,000.00 |
| 4. | கொக்குவில் சந்தை கருவாட்டுக்கடை இல 2 | 500.00 | 5000.00 | 86,000.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி : 28.11.2014 வெள்ளிக்கிழமை தொடக்கம் 11.12.2014 வியாழக்கிழமை 10 மணி வரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 12.12.2014 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி : 12.12.2014 வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணி

குத்தகை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
27.11.2014

(C/18025)(5.6.3)

ப.வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.

## யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
### தரம் -6 அனுமதி
### (ஆங்கிலம் /தமிழ் மொழி மூலம்)

எமது கல்லூரியின் தரம் -6 அனுமதி பெறும் மாணவர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 04.12.2014 வியாழக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(சி/18021)(5.6.3)

-அதிபர்-

செய்திகள்

# ஸ்கந்தபுரத்தில் 90 ஏக்கரில் நெற் செய்கைக்கு அனுமதி

## இராணுவம் ஆக்கிரமித்திருந்த கரும்புத் தோட்டம் விடுவிப்பு

கிளிநொச்சி, நவ.28

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியில் 90 ஏக்கர் நெற் செய்கைக்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளதாக ஸ்கந்தபுரம் நாகதம்பிரான் கமக்கார அமைப்புத் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்தார்.

ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். 200 ஏக்கர்காணியில்பயிர்ச்செய்கை மேற்கொள்ள இராணுவம் மீள் குடியேற்ற நாளிலிருந்து அனுமதி மறுத்து வந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு கரும்புத் தோட்டக் காணி இராணுவத்தின்பொறியியல்பிரிவுக்குவேண்டும் என்று அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பி இருந்தது.

ஆனால் ஸ்கந்தபுரம் மக்கள் இராணுவம் கரும்புத் தோட்டக் காணியிலிருந்து வெளியேறுவதன் மூலம் கரும்பு ஆலை அமைக்கவும்கரும்புமற்றும்நெல் போன்ற பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள முடியும் என்று போராடி வந்த நிலையில் 90ஏக்கர்காணிவிடுவிக்கப்பட்டுள்ளது.

கரும்புத் தோட்டக் காணியை இராணுவம் முற்றாக விடுவிக்க வேண்டும் என்றும் அந்தப்பகுதி மக்கள் போராடி வருகின்றனர்.

கரும்புத் தோட்டக் காணியில் இருந்துஇராணுவம்வெளியேறுவதன் மூலம் இந்தக் காணியில் மீளவும்கரும்புஆலைஅமைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-18)

## கருவி நிலையத்தினர் நடத்தும் மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு

மாற்றுவலுவுடையோரின்சமூக வள நிலையமான கருவி இவ்வருடத்திற்கான மாற்று வலு தின நிகழ்வை நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடத்தவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ் வுக்கு கருவி நிறுவனத்தின் செயலாளர் து.யசிந்தன் தலைமை வகிப்பார். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக கணக்காய்வு அத்தியட்சகர் க.பிரதீபன், ஜெ.அன்ரனி ஆகியோரும் சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-ரி)

## 'மழைக்கால குறிப்புக்கள்' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ, 28

வேலணையூர் தாஸின் 'மழைக்கால குறிப்புக்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நிலாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை கவிஞர் கருணாகரன் நிகழ்த்தவுள்ளதுடன் நூலின் முதற் பிரதியை நடனமுருகன் வைத்திய நிலைய வைத்தியர் க.நவரத்தினம் பெற்றுக்கொள்வார். (வ-10-)

## வாசிப்புமாத நிகழ்வுகளின் இறுதிநாள் பரிசளிப்பு விழா

தென்மராட்சி,நவ. 28

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் கடந்தமாதம் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம் பெறும்.

பிரதேச சபைத்தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஓய்வு நிலை வடமாகாணப் பணிப் பாளர் திருமதி வி.ஸ்ரீஸ்காந்தரூபன், பிரதேச சபை செயலாளர் செல்வி சி.தர்சினி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாகப் பிரதேச சபை உறுப்பினர்களான வே.கந்தையா, ச.ஞானலிங்கம், சன சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகசீலன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத் தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற முன்பள்ளிகளுக்கு பரிசில் வழங்கல் இடம் பெறும். (வ-9)

## ஏல விற்பனை இடைநிறுத்தம்

மல்லாகம், நவ.28

மல்லாகம் நீதிமன்றத்தில் நாளை சனிக்கிழமை நடைபெற இருந்த பகிரங்க ஏலவிற்பனை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## 'நீங்காத நினைவுகள்' நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், நவ 28

எழுத்தாளர் ஐ.தி. சம்பந்தன் எழுதிய 'நீங்காத நினைவுகள்' என்ற அனுபவ வரலாற்றுப்பதிவு நூல் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை யாழ். கல்லூரி வீதி, நீராவியடியில் உள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள் வார்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான த.சித் தார்த்தன், பா.கஜதீபன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வீரமங்கை யோகரட்ணம் நிகழ்த்துவார். நூல்ஆய்வுரையை பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் நிகழ்த்துவார். (வ-4)

## கலைஞர் சங்கமம்

யாழ்ப்பாணம், நவ.28

வேலணை கலாசாரப் பேரவையின் கலைஞர் சங்கமம் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

2015ஆம் ஆண்டுக்கான திட்ட முன்மொழிவுகள் குறித்த ஆலோசனைகள் இதில் கலந்துரையாடப்படும்.

இந்த ஆண்டுக்கான பிரதேச கலாசார விழா அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-7)

## மரண அறிவித்தல்கள்



### சண்முகம் பொன்னுத்துரை (எஸ்.பொ)

(பிரபல எழுத்தாளர்)

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பொன்னுத்துரை 26.11.2014 புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-அம்மாக்குட்டி தம்பதியரின் மகனும், ஈஸ்பரத்தின் அன்புக் கணவரும், மணிமேகலா, டாக்டர் பொன் அனுரா, காலஞ்சென்ற ராஜ்மித்ரா, ரஜபுத்திரா, ரஜஇந்திரா, கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமேஸ்வரம் இராசமணி, காங்கேஸ் மங்கையர்க்கரசி, சரவணமுத்து, திருநாவுக்கரசு பரமேசுவரி, கனகசபை இராஜேஸ்வரி, சரச்சந்திரன், சொல்வேந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2014) சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(41574) (10.6.3) ச.சொல்வேந்தன்

### திருமதி இராசமலர் வைத்திலிங்கம்

(ஓய்வுபெற்ற சுடுர்புநல உத்தியோகத்தர் கிரின் மெமோரியல் வைத்தியசாலை, மானிப்பாய்)



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசமலர் வைத்திலிங்கம் நேற்று (27.11.2014)வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் மனைவியும், காலஞ் சென்றவர்களான வை.சுரேந்திரன், வை.சுதாகரன் மற்றும் சுஜிபா வத்சலன் (யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) சுயாதா தவராசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், க.வற்சலனின் (யாழ்.போதனா வைத்தியசாலை) மாமியும், வி.ஜெஸ்மினா, வ.வைஷ்ணவன், வ.விஷ்னுகன், வ.வைஷ்ணவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.11.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.வற்சலன் (மருமகன்) (41579)(5.6.3)



### திருமதி ஜெசி ஜெயக்குமாரி யேம்ஸ்பிள்ளை

யாழ். சுண்டுக்குளி, பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெசி ஜெயக்குமாரி யேம்ஸ்பிள்ளை 21.11.2014 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் மாஸ்டர் - அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான லாசரஸ் - சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்ரனி யேம்ஸ் பிள்ளையின் அன்பு மனைவியும், சற்றைக், ஷிரளி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற ஜெகரெட்டினம் மற்றும் ஜீவரெட்டினம் (யாழ். பாண்டியன்தாழ்வு), ஆனந்தகுமாரி (ஆஸ்திரேலியா), விஜய ரெட்டினம் (வத்தளை), பிறேமகுமாரி (டென்மார்க்), குணரெட்டினம் (ஆஸ்திரேலியா), யோகரெட்டினம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கனடாவில் நாளை (29.11.2014) சனிக்கிழமை நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/2, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (41570)(45.3)

தகவல்:
A.J.ஜீவரெட்டினம்

# கொட்டித் தீர்த்தது மழை

## பல இடங்களில் மக்கள் இடம்பெயர்வு தாழ்ந்த பிரதேசங்கள், வயல்களில் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ.28
பருவப்பெயர்ச்சி காரணமாக, வடமாகாணம் முழுவதிலும் கடந்த இரு தினங்களாக மழை கொட்டுகின்றது. அடைமழை காரணமாக குளங்களும் நிரம்பியுள்ளன. வயல்களிலும் வெள்ளம் தேங்கியுள்ளதுடன் பொது மக்களின் வீடுகள், வீதிகளிலும் வெள்ளம் தேங்கியுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் நேற்று மழை கொட்டியது. இதனால் நேற்று மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**யாழ்ப்பாணத்தில்**

யாழ். கரையோரப் பகுதிகளான வசந்தபுரம், நித்தியஒளி, கொட்டடி, மீனாட்சிபுரம் போன்ற பகுதிகளில் வீதியை ஊடறுத்து வெள்ள வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன. இந்த வாய்க்கால்கள் ஊடாக வெள்ளம் ஓரளவு வழிந்தோடியது.


பொம்மைவெளி, உதயபுரம், எழிலூர் போன்ற பகுதிகளில் தாழ்ந்த இடங்களில் அதிகளவில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அத்துடன் தாழ்ந்த வயல்களில் வெள்ளம் தேங்கியதால் அதனை அகற்றுவதில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

**தென்மராட்சியில்**

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெய்துவரும் தொடர் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. அனைத்து இடங்களிலும் வெள்ளமாக காணப்படுகின்றது. பிரதேசத்தின் தாழ்வான பகுதிகளில் பல குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் அயலில் உள்ள உறவினர், நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஏ-9வீதியில் மீசாலை புத்தூர் சந்தி தொடக்கம் மிருசுவில் மருத்துவமனை வரையான பல இடங்களில் மழை வெள்ளம் வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்ந்து கொண்டிருப்பதால் போக்குவரத்துச் செய்வோர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பிரதேசத்தின் அனைத்துப் பகுதி நெல் வயல்களிலும் வரம்புக்கு மேலாக வெள்ளம் காணப்படுவதால் வெள்ள நீரை அகற்றுவதில் நெற் செய்கையாளர்கள் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர். வயல்களுக்குள் உள்ள குளங்கள் நிறைந்து இணைந்துள்ள வாய்க்கால்களால் வெள்ளம் கரைபுரண்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றது.



யாழ்.பொம்மைவெளி

**வலி.தெற்கில்**

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் வீதியின் பின்புறத்தில் உரிய முறையில் மதில்கள் கட்டப்படாமையால் வெள்ளம் வடிந்தோட முடியாத நிலையில் வீடுகளுக்குள் புகும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் இந்த வீதியில் உள்ள சுமார் 10 வரையிலான குடும்பங்களின் வீட்டுக் காணிகளுக்குள் வெள்ளம் தேங்கியுள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் நிலைமை மேலும் மோசமாகும், என்று கூறப்படுகின்றது. பிரதேச சபை உடனடியாக இந்த விடயத்தில தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

**வடமராட்சியில்**

வடமராட்சியிலும் கடும் மழையினால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. காலை முதல் மாலை வரை மழை கொட்டியதால் மக்கள் தமது அன்றாட அலுவல்களைக் கவனிக்க முடியாமல் சிரமப்பட்டனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 151 குடும்பங்களும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 60 குடும்பங்களும் இடம் பெயர்ந்துள்ளன. பொது நோக்கு மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(த-5-17-86-9-173-108)

## மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 28
யாழ்.மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழை மற்றும் கடும் காற்றுக் காரணமாக ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 500 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 350 வீடுகள் வரையிலும் சேதமடைந்துள்ளன. மின்னல் தாக்கத்தினால் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்னிரவு வரையிலான நிலைப்பாடே இதுவெனவும், தொடர்ந்தும் மழை பெய்யுமானால் 3ஆயிரம் குடும்பங்கள் வரையில் பாதிப்படையக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கு, கடும் காற்று, மின்னல் ஆகிய இடர்களினாலேயே யாழ்.மாவட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இடர் பாதித்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்னிரவு வரையில், ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 500 பேர் வரையில் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் 350 வீடுகள் வரையிலும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சங்கானையில் மின்னல் தாக்கத்தினால் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் அவர்களுக்கு அதனை தொடர்ந்து ஒரு வாரத்துக்கு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்தும் மழை பெய்யுமானால் மூவாயிரம் குடும்பங்கள் வரையில் பாதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)



வவுனியா மகிழங்குளம்

## வவுனியாவில் மழையால் ஆயிரத்து 845 பேர் பாதிப்பு

வவுனியா, நவ 28
வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக 559 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 845 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

மழை காரணமாக 76 குடும்பங்களைச் சேர்ந்த 262 பேர் இடம்பெயர்ந்த நிலையில் புதிய வேலர் சின்னக்குளம் மற்றும் சமணங்குளம் பொதுநோக்கு மண்டபங்களிலும், விளக்குவைத்தகுளத்தில் முன்பள்ளியிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மகிழங்குளத்தில் 44 குடும்பங்களைச் சேர்ந்த 173 பேரும், விளக்கு வைத்தகுளத்தில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 77 பேரும் சமணங்குளத்தில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேரும் இடம் பெயர்ந்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலர் பிரிவிலிருந்து 456 குடும்பங்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து ஒரு குடும்பமும், வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து 46 குடும்பங்களும், செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவிலிருந்து 14 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

செட்டிகுளம் மற்றும் வவுனியா பிரதேச செயலர் பிரிவுகளில் 17 மண் வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. வவுனியா வடக்கு மற்றும் வவுனியா பிரதேச செயலர் பிரிவுகளில் 357 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(த-402)

## சபாபதிப்பிள்ளை முகாமுக்குள்ளும் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ.28
தொடர் மழை பெய்து வரும் நிலையில் சுன்னாகம் சபாபதிப்பிள்ளைநலன்புரிமுகாமில் வெள்ளத்தால் பாதிப்புற்ற குடும்பங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்போது அவர்களின் வீட்டுக்கு உடனடித் தேவையாக மக்கள் கேட்ட சாக்குப் பைகளை வழங்கினர்.

சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாமில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ள 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீடுகள் மழையால் ஊறி அவர்கள் இடம்பெயர வேண்டிய நிலையில் உள்ளனர். இது தொடர்பில் மக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து அங்கு நேரடியாகச் சென்ற வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், சித்தார்த்தன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் மக்களின் வீடுகளைப் பார்வையிட்டனர்.

இதன்போது அங்குள்ள குடும்பங்கள் தங்களது வீடுகள் ஊறி இருப்பதால் தறப்பாள், சாக்குகளை வாங்கித்தருமாறு கேட்டுக் கொண்டனர். இதனால் அங்குள்ள குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் அமைச்சர் ஐங்கரநேசன் 500 சாக்குகளை உடனடியாகப் பெற்றுக் கொடுத்தார்.

(த-14)



சவுத்பார்

## வெள்ளத்தில் மூழ்கிய சவுத்பார்

மன்னார், நவ. 28
பெய்து வரும் மழை காரணமாக மன்னார் கரையோரப் பகுதியில் 62 குடும்பங்களைச் சேர்ந்த 234 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மழை காரணமாகக் கடல் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் கடல், நீர் சவுத்பார் கிராமத்தின் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. இந்தக் கிராமத்தின் பிரதான வீதியும் நீரில் மூழ்கியுள்ளது.

இதனால் இங்கு வசித்து வரும் சுமார் 62 குடும்பங்கள் வீட்டை விட்டு வெளியேறி அப் பகுதியிலிருக்கும் பொது மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(த)

# யாழ். இராணுவ தளபதியாக மேஜர் ஜெனரல் அல்விஸ்

## இன்று முதல் பொறுப்ப(ே)ற்கின்றார்



யாழ்ப்பாணம், நவ.28
இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரியாகவும், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாகவும் மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு இராணுவ இணையத்தளத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

அவர், யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இன்று முதல் செயற்படுவார் என்றும், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தளபதியாக டிசெம்பர் 10 ஆம் திகதியிலிருந்தும் பணியாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா, கொழும்புக்கு திடீரென இடமாற்றப்பட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையிலுமே அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

கடந்த ஜனவரி மாதம், யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாகப்பதவியேற்றிருந்தார் மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா. பதவியேற்று பதினொரு மாதங்களுக்குள்ளேயே அவர் இடமாற்றப்பட்டுள்ளார். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தலைமையிலான, பாதுகாப்பு அதிகாரிகளின் தலைமையகத்தின் அதிகாரிகளுக்கான பணிப்பாளராக மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா நியமனம் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் இன்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளாக இஸ்ரேலுக்கான துணைத் தூதுவராகப் பணியாற்றிய இவர், எதிர்வரும் முதலாம் திகதி, யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக உத்தியோகபூர்மாகப் பதவியேற்கவுள்ளார்.

அதேவேளை, மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரியாகவும் பொறுப்பேற்கவுள்ளார். மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் முன்னர் ஜனாதிபதிக்கான பாதுகாப்பு பிரிவின் தலைவராக பணியாற்றியிருந்தார். (ற-5)



உதயனின் 30 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு நேற்று இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஒன்று யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் அரசியல் தலைவர்கள், நலன் விரும்பிகள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். (த-20-21)

# மைத்திரிக்கே ஆதரவு

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.28
பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜரத்தன தெரிவித்துள்ளார். அதே போன்று ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் பொது வேட்பாளருக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆளும் கட்சியிலிருந்து பிரிந்து வந்த மைத்திரிபால சிறிசேன பொது எதிரணி வேட்பாளராக நியமிக்கப்பட்டார். அதனால் ஆளும் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது. அதன் தாக்கம் மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களில் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஆட்சியின் கீழுள்ள மிஹிந்தலை பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வரவு – செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக இரண்டு வாக்குகளும் எதிராக மூன்று வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. அதே போன்று ஆளுங்கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லேரியாவ பிரதேச சபையின் தவிசாளர் சோலங்கராச்சி பொது எதிரணி வேட்பாளரை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜரத்ன தனக்கு ஆதரவு வழங்க உள்ளதாக மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வ 'டுவிட்டர்' பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

# வாகனங்கள் இடையே நசிந்து நபர் சாவு

யாழ்ப்பாணம், நவ 28
வீதி திருத்தப் பணிகளை மேற்பார்வை செய்பவரை பின்பக்கமகச் சென்ற புல்டோசர் வாகனம் டிப்பருடன் சேர்த்து நசித்தமையால் தலை நசிந்து சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

குறித்த வாகனங்களின் சாரதிகளான தென் பகுதியைச் சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் முருங்கன் கற்கடந்தபுரம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா புதுக்குடியிருப்பைச் சேர்ந்த நடேசன் தியாகலிங்கம் (வயது – 32) என்பவரே விபத்தில் உயிரிழந்தார்.

அது விபத்தா அல்லது வேறு காரணமா என்பது பற்றிய விசாரணை முன்னெடுக் கப்படுகின்றது. (த-4)

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் ராணுவம் தீவிர கண்காணிப்பு

## ஆலயங்களில் வழிபாடுகளுக்குத் தடை

கிளிநொச்சி, நவ.29
மாவீரர் நாள் உலகெங்குமுள்ள தமிழர்களால் நேற்று உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டிருந்த நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இராணுவத்தினர் தமது கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியிருந்தனர். அங்குள்ள தேவாலங்கள், இந்து ஆலயங்கள் போன்றவற்றில் வழமையான வழிபாட்டு நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

செம்மலைப் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் மக்கள் தமது வழமையான வழிபாட்டுக்காக மெழுகுவர்த்தி ஏற்றி வழிபட்டபோது, இராணுவத்தினரால் அவை அணைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்து ஆலயங்களில் நேற்றைய பூசை நிகழ்வுகள் நிறுத்தப்பட்டன என்றும், அதனால் ஆகம விதிகளுக்கு ஒவ்வாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் இந்துக் குருக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினர் தமது கண்காணிப்புகளையும், கெடுபிடிகளையும் அதிகரித்திருந்தபோதும், மக்கள் தமது உறவுகளை வீடுகளில் நினைவேந்தியுள்ளனர். தமது உறவுகளுக்கு வீடுகளில் விளக்கேற்றி, உணவுப் பொருள்கள் படைத்து உணர்வுபூர்வமான நினைவேந்தலை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் நேற்று முன் தினம் வள்ளி புனத்தில் உள்ள மயானம் ஒன்றில் புனரமைக்கப்பட்ட கட்டடத்தை பார்வையிடச் சென்றிருந்தார் என்றும், அதையடுத்து நேற்றுமுன் தினம் முதல் அந்தப் பகுதியில் இராணுவத்தினர் தமது கண்காணிப்பை அதிகரித்திருந்ததுடன், அந்த நிகழ்வு குறித்த விவரங்களையும் திரட்டினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-426)

# மாகாண சபை முன் ராணுவம்

கைதடியிலுள்ள வடமாகாண சபை அலுவலகம் முன்பாகவும் நேற்று ராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

வீதிகளில் வழமையாக இடம்பெறும் ராணுவ ரோந்துகள் நேற்றுத் தீவிரமாகியிருந்தது. அதனால் மக்கள் ஒருவித அச்சத்துடனே பயணம் மேற்கொள்ள முடிந்ததாக தெரிவித்தனர். குடாநாட்டில் கோயில்கள், சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் நின்றிருந்த இளைஞர்கள் ராணுவத்தினரால் வீடுகளுக்குச் செல்லுமாறும் கூறப்பட்டதாகத் தெரிவித்தனர். (த-4,21)

# இலங்கை மீனவருக்கு மறியல் நீடிப்பு

இந்திய எல்லைக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 12 பேருக்கும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி கன்னியாகுமாரி அருகே 14 கடல் மைல் தொலைவில் இந் திய கடல் பகுதியில் மீன்பிடித் துக் கொண்டிருந்த போது இந்திய கடலோர காவல்படையினர் இரண்டு படகுடன் 12 மீனவர்களையும் சிறைபிடித்தனர். எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்று அவர்கள் மீது பொலீஸார் வழக்கு பதிவு செய்ததுடன், இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத் தில் முற்படுத்தினர். விசாரனை மேற் கொண்ட நீதிவான் குறித்த மீனவர்களை சென்னை புழல் சிறையில் அடைக்க உத்தரவிட்டிருந்தார். (ற-14)

# எஸ்.பொ காலமானார்



புகழ்பெற்ற இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும் ஆஸ்திரேலியாவில் வசித்துவந்தவருமான எஸ். பொ. என அழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை சிட்னி யில் நேற்று முன் தினம் காலமானார்.

எஸ். பொ. 04 – 06 – 1932 இல் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், சென்னை கிறீஸ்தவக் கல்லூரியிலும் உயர் கல்வி பயின்றவர். இளம்வயதில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளராகச் செயற்பட்டார். பின்னர் அவர்களுடன் முரண் பட்டுத் தனித்துவமாகச் செயற்பட்டார். நைஜீரியாவில் கல்லூரி ஆங்கிலத் துறையில் தலைவராகப் பணியாற்றிய இவர் மட்டக்களப்பில் ஆசிரியராக வும், அதிபராகவும் பணியாற்றினார். நாவல், சிறுகதை, நாடகம், கவிதை, பத்தி எழுத்து, விமர்சனம் முதலிய துறைகளில் ஆளுமைமிக்கவராக விளங்கினார். இலங்கையில் முற் போக்கு எழுத்தாளர் சங்கம் தீவிரமாகச் செயற் பட்டுக் கொண்டிருந்த காலத்தில் அதிலிருந்து விலகி நற்போக்கு அணியைத் தொடங்கியவர்.

பிறமொழிப் படைப்புகள் சிலவற்றைத் தமிழுக்குக் கொண்டு வந்தவர். இவரது சிறுகதைகள் யாவும் தொகுக்கப்பட்டு "எஸ். பொ. கதைகள் என்ற தொகுதியாக வெளிவந்துள்ளது. (த)

*(இவர் பற்றிய குறிப்பு வரை 08ஆம் பக்கத்தில்)*

செய்திகள்

# ஹியூக்ஸை காப்பாற்ற இறுதி வரை போராடினோம்




பவுன்சர் பந்தில் அடிபட்டு இத்தகைய தீவிர காயம் ஏற்படுவது அரிதிலும் அரிது என்று பிலிப்ஸ் ஹியூக்ஸிற்கு அறுவை சிகிச்சை செய்த செயின்ட் வின்சென்ட் மருத்துவமனை மருத்துவர் டோனி கிராப்ஸ் தெரிவித்துள்ளார்.

பவுன்சர் பந்து நேராக அவரது முதுகெலும்பு நரம்பில் சேதங்களை ஏற்படுத்தியது. மூளையுடன் தொடர்புடைய மிக முக்கிய நரம்புகளில் இதுவும் ஒன்று. அடிபட்டவுடன் இந்த நரம்பு முறிந்தது. இதனால் கடுமையான குருதிப்போக்கு ஏற்பட்டது. இதுவே அவரது உயிரிழப்புக்குக் காரணம் என்றார் அவர்.

இது குறித்து டோனி கிராப்ஸ் கூறியதாவது:–


முதுகுத் தண்டையும், மூளையையும் பாதுகாக்கும் சவ்வுகளில் குருதிப்போக்கு ஏற்பட்டு பிலிப்ஸ் ஹியூக்ஸ் மரணமடைந்தார். இது மிகவும் அரிதாக நிகழ்வதே. மொத்தமாகவே இதுவரை இது போன்ற நிலை 100 பேர்களுக்குத்தான் ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்பாக கிரிக்கெட் பந்தில் அடிபட்டு இப்படி நிகழ்வது ஒரே ஒரு முறை ஏற்பட்டுள்ளது. பிலிப்ஸ் ஹியூக்ஸ் எங்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டவுடன் சி.ரி.டி. ஸ்கான் எடுத்து மேற்கொண்டு சிகிச்சையைத் திட்டமிட்டோம்.

அடிபட்டதால் மூளையின் அந்தப் பகுதியில் அழுத்தத்தைக் குறைக்கச் சிகிச்சை அளிக்க முடிவெடுத்தோம். அதன் பிறகு மண்டை ஓட்டின் சில பகுதிகளை அகற்றி மூளை விரிவடைய வழிவகை செய்தோம், ஏனெனில் மூளை ரத்தக் கட்டினால் சுருங்கிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தோம். அறுவை சிகிச்சை சுமார் 1 மணி 20 நிமிடங்கள் நடந்தது. அதன் பிறகு தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அவரை மாற்றினோம்.

இவ்வகை விடயங்களில் எங்களது அணுகுமுறை என்னவெனில் அவரை கோமாவில் ஆழ்த்துவது. ஏனெனில் மூளைக்கு ஓய்வு அளிக்கப்படவேண்டும். ஆனால் அதே சமயத்தில் உடலின் மற்ற செயல்பாடுகளைக் கண்காணித்து வந்தோம்.

24 மணி நேரம் முதல் 48 மணி நேரம் வரை காத்திருந்தோம், எங்களால் முடிந்தவற்றைச் செய்து பார்த்தோம், ஆனால் முன்னேற்றம் ஏற்படவில்லை. கடைசியாக அவர் உயிர் பிரிந்தது என்றார். (த)

## பழைய ஹெல்மெட்டால் ஏற்பட்ட பெரும் விபரீதம்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வளர்ந்து வரும் நட்சத்திரமாக உருவெடுத்த 25 வயதான பிலிப்ஸ் ஹியூக்ஸ் 26 டெஸ்ட் மற்றும் 25 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி இருக்கிறார். இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இடம் பெறும் முனைப்புடன் தயாராகி வந்த அவரது வாழ்க்கையில் விதி வேறுவிதமாக விளையாடி விட்டது.

இந்த நிலையில் அவர் பழைய மொடல் ஹெல்மெட்டை அணிந்து (2013 ஆம் ஆண்டின் வகை) விளையாடியதால் தான் காயம் இந்த அளவுக்குச் சீரியசாகி விட்டதாம். இது தொடர்பாக இங்கிலாந்தைச் சேர்ந்த அந்த ஹெல்மெட் தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹியூக்ஸ் அணிந்து விளையாடிய ஹெல்மெட் பழைய மொடல்.

எடையும் குறைவானது. எங்கள் நிறுவனத்தின் புதிய மொடல் ஹெல்மெட்டில் கூடுதல் பாதுகாப்பு வசதிகளைச் செய்துள்ளோம். காதுகளுக்குப் பின்னால் அதிகப்படியான கம்பி கிரில் வரும்படியாகத் தற்போதுள்ள ஹெல்மெட்டுகளைதயாரித்துள்ளோம். அதேபோல் ஹெல்மெட்டின் பின்புறத்திலும் கூடுதலாக உலோகத்தைச் சேர்த்துள்ளோம். புதிய மொடல் ஹெல்மெட் கடந்த ஓகஸ்ட் மாதம் விற்பனைக்கு வந்துவிட்டது. ஹியூக்ஸை பந்து எவ்வாறு தாக்கியது என்பதை நாங்கள் வீடியோ காட்சிகள் மூலம் ஆராய்ந்தோம். தலையின் பின்பாகத்தில் ஹெல்மெட் கிரிலுக்கு கீழாகப் பந்து தாக்கியிருப்பது தெரியவந்தது. தலைக்கும், கழுத்துக்கும் இடையே ஹெல்மெட்டால் முழுமையாகப் பாதுகாப்பு அளிக்க முடியாது. துடுப்பாட்ட வீரர்கள் தான் பந்துக்கு ஏற்றபடி சரியான திசையில் திரும்பி விளையாடவேண்டும்.' எனக் கூறப்பட்டுள்ளது. (த)

## பவுன்சர் பந்துக்கு தடை வருமா ?




அசுர வேகத்தில் வீசப்படும் பவுன்சர் துடுப்பாட்டக்காரர்களின் தலை, கழுத்து பகுதியை நோக்கி வரும். இது மாதிரியான பந்துகளைச் சரியாகக் கணிக்காமல் ஆடினால் காயப்படுவது தவிர்க்க இயலாது. இதனால் தான் ஓவருக்கு ஒரு பவுன்சர் மட்டும் வீச அனுமதிக்கப்பட்டது.

தற்போது ஹியூக்ஸ் பவுன்சர் பந்தில் உயிரிழந்துள்ளார். இதனால் மற்ற துடுப்பாட்டக்காரர்களுக்கு இது பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் பவுன்சர் பந்துக்குத் தடை விதிக்கவேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

## மைல் கல்லை எட்டிய சங்கா

### நொருக்கி தள்ளிய டில்ஷான்




இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் சங்கக்காரா 450 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்த விக்கெட் கீப்பர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இவர் மொத்தமாக 452 வீரர்களை ஆட்டமிழக்க செய்து இரண்டாம் இடத்தில் இருக்கிறார். முதலிடத்தில் ஆஸ்திரேலிய வீரர் ஆடம் கில்கிறிஸ்ட் 472 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

சங்கக்காராவின் 450ஆவது விக்கெட் ஜோ ரூட். இவர் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் 2 ஓட்டங்களில் வெளியேறினார்.

அதேபோல் டில்ஷான் பொறுமையாக விளையாடி 88 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இது இந்த வருடத்தில் இவர் எடுத்த அதிகபட்ச ஓட்டங்கள் ஆகும்.

இங்கிலாந்து அணி 18வது முறையாக 300 ஓட்டங்களுக்கு மேல் உள்ள இலக்கை எட்ட முடியாமல் தோல்வியை தழுவியுள்ளது.

மேலும் மொயின் அலி இந்த போட்டியில் 119 ஓட்டங்களை குவித்தார். இதில் 5 சிக்சர்களும் அடங்கும். இதன் மூலம் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி அதிக சிக்சர் விளாசிய இங்கிலாந்து வீரர்கள் வரிசையில் மொயின் அலியும் சேர்ந்துள்ளார். இதற்கு முன்பு ஆண்ட்ரூ ஸ்ரொஸ் 5 சிக்சர்களையும், பிளின்ரோப் 7 சிக்சர்களையும் அடித்துள்ளனர். (த)

# சிகிச்சைகள் பயனின்றி உயிரிழந்தார் ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ்

நியூசவுத்வேல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் தலையில் அடிப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார்.

ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் நியூ சவுத் வேல்ஸ்– தெற்கு ஆஸ்திரேலிய அணிகள் மோதிய ஆட்டத்தில் தெற்கு ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸின் தலையில் பந்து தாக்கியதில் அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.



தொடர்ந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த பிலிப் ஹியூக்ஸ் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். இதனை ஆஸ்திரேலிய அணியின் மருத்துவர் பீற்றர் புருக்ணர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகை யில், இந்த விடயத்தைக் கூற நான் வருத்தப்படுகிறேன். சில மணி நேரத்துக்கு முன்பு தான் பிலிப் ஹியூக்ஸ் காலமானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட விபத்துக்குப் பிறகு அவரது சுயநினைவு திரும்பவே இல்லை. இறக்கும் முன்பு அவர் எந்தவித வலியையும் உணரவில்லை. குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சுற்றி இருக்கும்போதே அவரது உயிர் பிரிந்தது.

நான் எனது ஆழ்ந்த அனுதாபங்களை கூறிகொள்வதோடு, கிரிக்கெட் துறைக்கு இவரது மரணம் பெரிய இழப்பு என்பதைத் தெரிவித்து கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.



## பிலிப் ஹியூக்ஸின் மறைவினால் போட்டிகள் அனைத்தும் நிறுத்தம்

பாகிஸ்தான் – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்றைய தினம் சார்ஜாவில் ஆரம்பமானது. ஏற்கன்வே நடந்து முடிந்த இரண்டு போட்டிகளில் முதல் போட் டியில் பாகிஸ் தான் அணி வெற்றி பெற்றும் இரண்டாவது போட்டி சம நிலையிலும் முடிவடைந்ததையடுத்து 1:0 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி தொடரில் முன்னிலை வகிக்கிறது. இதனால் இப் போட்டியில் கட்டாயம் வெற்றி பெற்றுத் தொடரை சமநிலைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் நியூசிலாந்தும் போட்டிய்ய வெற்றி பெற்றோ அல்லது சமநிலையில் முடித்தோ தொடரைக் கைப்பற்றவேண்டும் என்ற நோக்கில் பாகிஸ்தானும் விளையாடி வருகின்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கியவர்களில் மசூட் 12, யுனிஸ் கான் 5 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் மறுமுனையில் ஹபீஸ் தனித்து நின்று போராடி சதத்தை நிறைவு செய்தார். ஹபீஸ், மிஸ்பா நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி தமக்குள் 121 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து பாகிஸ்தானை சரிவில் இருந்து மீட்க

நேற்றைய ஆட்ட நேர நிறைவில் பாகிஸ்தான் அணி முதலாம்நாள் ஆட்ட நேர நிறைவில் 3 இலக்குகள் இழப்புக்கு 281 ஓட்டங்களைப் பெற்றது. ஹபீஸ் 178 ஓட்டங்களுடனும் மிஸ்பா 38 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் நியூசிலாந்து சார்பாக கிறைக் 2 இலக்குகளையும் விக்டோரி 1 இலக்குகளையும் கைப்பற்றினர்.

மூன்று தினங்களுக்கு முன்பு பவுன்சர் ஒன்றைத் தவறாக எதிர்கொண்டு தலையின் பின்புறத்தில் பலத்த காயமடைந்து கவலைக்கிடமான முறையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பிலிப்ஸ் ஹியூஸ் நேற்று அதிகாலை இறந்ததன் காரணத்தினால் நேற்றைய தினம் இடம்பெறவிருந்த ஐ.சி.சி யின் சகல போட்டிகளும் கைவிடப்பட்டன. ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும். (த–ரி)

# வேதனையில் சீன் அப்போட்



பவுன்சர் பந்து வீசி பிலிப் ஹியூக்ஸை நிலைகுலைய வைத்த வேகப் பந்து வீச்சாளர் சீன் அப்போட் மிகுந்த மன உளைச்சலில் இருக்கிறார். இவர் மீது எந்தத் தவறும் இல்லை. இருப்பினும் பிலிப் ஹியூக்ஸின் இந்த நிலைமைக்குத் தான் காரணமாகிவிட்டோமே எனப் புலம்பிக் கொண்டிருக்கிறார்.

சீன் அப்போட்டுக்கு இப்போது முழு ஆதரவு அவசியம் என்று தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சுதர்லாண்ட், இது ஓர் அசாதாரணமான நிகழ்வு.

நடந்த சம்பவத்துக்கு எந்த வகையிலும் அவர் காரணம் கிடையாது என்பதை அனைவரும் உணரவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அதே போல் இங்கிலாந்து வீரர் ஸ்டூவர்ட் பிராட் கூறுகையில், பவுன்சராக பந்து வீசியதற்காகச் சீன் அப்போட் குற்ற உணர்வுக்குள்ளாகக் கூடாது. கிரிக்கெட்டில் பவுன்சர் என்பது வேகப்பந்து வீச்சாளர்களின் ஒரு யுக்தி என்று கூறியுள்ளார்.

22 வயதான சீன் அப்போட் ஆஸ்திரேலிய அணிக்காக ஒரு நாள் போட்டி ஒன்றிலும், மூன்று 20/20 போட்டிகளிலும் ஆடியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு அரோகரா

ஐ.பி.எல் தொடரில் இருந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமத்தை உடனடியாக நீக்கவேண்டும் என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.



இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஷேர் ஹோல்டிங் பற்றிய விவரங்களை தருமாறும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை கட்டுப்படுத்துவது யார் என்ற விவரத்தை தெரிவிக்குமாறும் சீனிவாசனை உச்ச நீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய அணியின் அணித் தலைவராக உள்ளவர் இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவருக்குச் சொந்தமான நிறுவனத்தில் முக்கிய பொறுப்பில் இருப்பது பற்றியும் சரமாரியாக கேள்வியெழுப்பியுள்ளது.

ஐ.பி.எல். உருவாக்கியுள்ள விதிப்படி, ஆட்ட நிர்ணயத்தில் மற்றும் பந்தயத்தில் எந்த அணியாவது ஈடுபடுமானால் அதன் உரிமம் ரத்து செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.(த)

# செய்திகள்


## மரண அறிவித்தல்



### கந்தசாமி நடராசா

நீர்வேலி வடக்கு,நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நடராசா 2014.11.27 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தசாமி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு புதல்வனும் விக்கினேஸ்வரியின் அன்பு கணவரும் கிருஸ்ணகீதா (காமாட்சி அம்பாள் முன்பள்ளி ஆசிரியரும் கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோவில் அறநெறி ஆசிரியரும்) கிருஸ்ணரதி (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விநோதனின் (பிரதேச செயலகம், சாவகச்சேரி) பாசமிகு மாமனாரும், தீபிகவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்று சடலம் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0771535625
0777364811

தகவல்
குடும்பத்தினர்.


# மும்மூர்த்திகளுக்கு மகத்தான பிரியாவிடை




இலங்கை கிரிக்கெட் விளையாட்டின் 'மும்மூர்த்தி'களான மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார, திலகரட்ன டில்ஷான் ஆகியோர் தங்களது தாய்நாட்டில் விளையாடும் கடைசி சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர்களின்போது இரசிகர்கள் அவர்களுக்கு கௌரவமானதும் மகத்தானதுமான பிரியாவிடை அளிப்பர் என இலங்கை கிரிக்கெட் வீரர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.

இங்கிலாந்துக்கு எதிராக இங்கு நடைபெறும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் அவர்கள் மூவரும் சொந்த மண்ணில் விளையாடும் கடைசி தொடராக அமையும் எனக் கருதப்படுகின்றது.

அவர்கள் மூவரும் இங்கு விளையாடும் கடைசி தொடராக இங்கிலாந்துடான தொடர் அமையவுள்ளது. மஹேல, குமார், டில்ஷான் ஆகிய மூவரும் இலங்கை அணியின் அத்திவாரங்கள். அவர்கள் இலங்கைக்கு எத்தனையோ வெற்றிகளை ஈட்டிக்கொடுத்துள்ளனர். எனவே இரசிகர்கள் பெருமளவில் போட்டிகளுக்கு வருகைதந்து அவர்கள் மூவருக்கும் கௌரவமான பிரியாவிடை வழங்குவர் என நாங்கள் நம்புகின்றோம் என செய்தியாளர்கள் மத்தியில் லஹிரு திரிமன்னே கூறினார்.

அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் அன்றைய தினம் வயிற்றுளைவுக்குள்ளாகியிருந்ததால் அவருக்குப் பதிலாக செய்தியாளர்களுடனான சந்திப்பில் திரிமன்னே கலந்து கொண்டிருந்தார்.

இங்கிலாந்துடனான இந்தத் தொடரின் போது சிறந்த வியூகங்களை அமைத்து விளையாடுவதாகக் குறிப்பிட்ட அவர், இந்தியாவில் பவர் பிளே விளையாட்டின்போது விட்ட தவறுகளைத் தவிர்ப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

35ஆவது ஓவர்வரை பவர் பிளேக்கு காத்திராமல் அதற்கு முன்பதாக அதனைப் பயன்படுத்துவதற்கு எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(த)


## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர் யுவதிகள், மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 29.11.2014 சனி
1.காலை - 10.00-12.00 2.மாலை - 03.00-05.00

இப்பிரிவில் இணைவோருக்கு மட்டும்
அனுமதி, பாடப்புத்தகங்கள் சான்றிதழ் மட்டும் இலவசம்

30 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப்பணமும் திருப்பியளிப்பதற்கான உத்தரவாதம்.

SAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567



## போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு

Dec 20,21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள SLAS (Limited) போட்டிப் பரீட்சை
Sat 9.00am - 1.00pm
Dec 27,28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஆசிரியர் போட்டிப் பரீட்சை
Sat 2.00pm - 5.00pm
விரைவில் நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர் (Open) முகாமைத்துவ உதவியாளர் (Limited)
Sat 2.00pm - 5.00pm
விரிவுரையாளர்: P.உமாசங்கர், P.கமல்தாசன்

நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
077 469 6695



## முன்பள்ளி பொது ஆசிரியர் தேவை

விரும்புவோர் உடனடியாக நேரில் வரவும்
நேரம் 9.00 am - 12.00 உரும்பிராய் கிட்ஸ் பார்க் ஞானவைரவர் றோட் உரும்பிராய்.
தலைவர் T.P:- 021 205 4564
(41587)



## முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான

# திசைகாட்டியின் "கலைச்சிட்டுக்கள்"

(வறுமை நிலையிலுள்ள மாணவர்களின் கல்விக்கு நிதி உதவும் தன்னார்வ அமைப்பு)

2015 ஆம் ஆண்டில் பயனாளிகளுடன்



திசைகாட்டி குழுமத்தலைவர் திரு. S. சுபசீலன், "கலைச்சிட்டுக்கள்" பணிப்பாளர் திருமதி S. சுகந்தி, காப்பாளர். S. வாமதேவா

திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016
(C/18029)(10.6)



## விசேட கருத்தரங்கு

Dec 20,21 ஆம் திகதி நடைபெறவுள்ள
SLAS
பரீட்சைக்கு ஞாயிறு (30.11) காலை 9.00 மணி - 3.00 மணி வரை
அடுத்த வாரம் முதல் சனி, ஞாயிறு இரு தினமும் நடைபெறும்.
முகாமைத்துவ உதவியாளர் பதவியுயர்வு, வினைத்திறன் பரீட்சைகளுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
T.P:075 4164 564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)



## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் Cargills Squereஇல் உள்ள Trendy T - Shirt விற்பனை காட்சியறைக்கு பெண் விற்பனை உதவியாளர் தேவை. 20 - 35 வயதிற்கு உட்பட்டவர் ஆங்கிலத்தில் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :- 077 205 1262
(41561)
e mail:- hrdepartment@Trendyclub.net



## வெளிநாட்டு பார்சல் சேவை



அனைத்து நாடுகளுக்குமான பொருள்கள், ஆவணங்கள் போன்றவற்றை ஆகாயமார்க்கமாக குறுகிய நாள்களில் பிரபல்யம்வாய்ந்த கூரியர் கம்பனிகளின் ஊடாக உங்கள் உறவினர்களுக்கு அனுப்புவதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

# M.S.K என்ரப்பிறைசஸ்

இல.227A, வைத்தியசாலை வீதி, (சின்னல் போஸ்ட் முன்பாக) யாழ்ப்பாணம். 021 300 3424
(41105)(10.6)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.